15TH SEPTEMBER 2025

www.uthayam.lk

# உதயம்

சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்

உதயம்: 02 | இதழ்: 87 | பக்கங்கள் - 12 | editor.uthayam@gmail.com



## ஐ.நா.மாநாட்டில் பங்கேற்க அமெரிக்கா செல்லும் ஜனாதிபதி

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க, ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபைக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக செப்டம்பர் 22 ஆம்

02ம் பக்கம் பார்க்க...

# அடுத்த ஆண்டு ஆரம்பத்தில் மாகாண சபைத் தேர்தல்?

## எல்லை நிர்ணயம் மேற்கொள்ளாது தேர்தலை நடாத்த திட்டம்!

## விரைவில் வெளியாகவுள்ள அறிவிப்பு!!

மாகாண சபைத் தேர்தல்களை பழைய முறையில் நடாத்துவது குறித்து அரசாங்கம் ஆலோசித்து வருவதாக உயர் மட்டத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அண்மையில் ஜெனீவாவில் நடைபெற்ற மனித உரிமை ஆணைக்குழுவின் கூட்டத்தில் மாகாண சபைத் தேர்தல்களை நடாத்துவது குறித்து இந்தியா வலியுறுத்தியிருந்தது குறிப்பிடத்தக்கது.

இந்தப் பின்னணியிலே எல்லை நிர்ணயத்தை மேற்கொண்டு தேர்தலுக்குச்செல்வதில் சிக்கல்கள் தோன்றியிருப்பதும், தாமதங்கள் ஏற்படுவதன் காரணமாகவும் பழைய முறைப்படி மாகாண சபைத் தேர்தல்களை நடத்துவது குறித்து அரசாங்கம் தீவிரமாக ஆராய்ந்து வருகிறது.

14 வருடங்களுக்குப் பிறகு தேர்தல்களை நடாத்துவது பற்றி அவதானம்

02ம் பக்கம் பார்க்க...

## உரிமைகளை ஜனநாயக முறையில் வென்றெடுக்குமாறு மஹிந்த வேண்டுகோள்!



தமது உரிமைகளை பெற்றுக் கொள்ள ஜனநாயக ரீதியில் செயற்படுமாறு முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இளைஞர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

உத்தியோகபூர்வ

02ம் பக்கம் பார்க்க...

## 100 வீதம் மக்களுக்காக செயற்படும் ஜனாதிபதி நிதியம்.பிரதமர் ஹரிணி



வரப்பிரசாதம் பெற்ற ஒரு குழுவினரால் அவர்களின் வரப்பிரசாதமாக மாற்றிக் கொண்டிருந்த ஜனாதிபதி நிதியம், தற்போதைய அரசாங்கத்தின் கீழ் 100% மக்களுக்காகப் பயன்படுத்தப்படுவதாகப் பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

02ம் பக்கம் பார்க்க...

## அடுத்த வாரம் ஆரம்பமாகும் குருக்கள் மடம் அகழ்வுப் பணிகள்



மட்டக்களப்பு - குருக்கள்மடம் மனித புதைகுழியின் அகழ்வு நடவடிக்கைகளை அடுத்த வாரம் ஆரம்பிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

குருக்கள்மடம் மனித புதைகுழி அகழ்வுப்பணிகளுக்காக 29 இலட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாக தேசிய ஒருமைப்பாட்டு பிரதி அமைச்சர்

02ம் பக்கம் பார்க்க...

## நான்கு மணி நேரத்தில் புதிய கடவுச் சீட்டு

### குடிவரவு குடியகல்வு திணைக்களத்தின் துரித திட்டம்

கடவுச்சீட்டு விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்ட 4 மணி நேரத்திற்குள் உரிய நபருக்கு கடவுச்சீட்டு வழங்கப்படும் என குடிவரவு

02ம் பக்கம்பார்க்க...

## பொதுப் பரீட்சைகளுக்கான கால அட்டவணை வெளியீடு

2026 ஆம் ஆண்டில் நடைபெறும் பரீட்சைகள் தொடர்பான கால அட்டவணையை கல்வி அமைச்சு வெளியிட்டுள்ளது.

அதன்படி, 2025 (2026) கல்வி பொது

02ம் பக்கம்பார்க்க...

## இஸ்ரேலின் குற்றங்களுக்காக அந்த நாட்டை தண்டியுங்கள்

### சர்வதேச தலைவர்களிடம் கட்டார் பிரதமர் வேண்டுகோள்



சர்வதேச சமூகம், இரட்டை நிலைப்பாட்டை நிறுத்தி விட்டு இஸ்ரேல் இதுவரை செய்த குற்றங்களுக்காக அந்த நாட்டை தண்டிக்க தயாராக வேண்டும் என கட்டார் பிரதமர் அல் தானி வலியுறுத்தியுள்ளார்.

03ம் பக்கம்பார்க்க...

### கட்டார் மீதான தாக்குதல்:

## இலங்கை விடுத்துள்ள அறிக்கை அரசின் இயலாமையைக் காட்டுகிறது

### ரவூப் ஹக்கீம் சாடல்!



கட்டார் மீதான தாக்குதல் குறித்த அறிக்கை உட்பட, இந்த அரசாங்கம்

03ம் பக்கம்பார்க்க...

## பல்கலை ஆட்சேர்ப்பு பரீட்சை தமிழ் பரீட்சார்த்திகளுக்கு பாதிப்பு!

### ஜனாதிபதி, கல்வி அமைச்சு கவனத்துக்கு...

(அஸ்லம் எஸ்.மௌலானா)

பல்கலைக்கழகங்களில் நிலவும் உதவிப்

03ம் பக்கம்பார்க்க...

அமானா வங்கியில்
வாகன நிதியுதவி



உங்கள் வாகனத்துக்குரிய சாவியை
மிகவும் மலிவான மாதாந்த தவணைகளில் பெற்றுக்கொள்ளுங்கள்

ரூ. 1,933/-
ரூ.100,000க்கு வாடகை*

- குறைந்த தவணைக்கட்டணம்
- 7 ஆண்டுகள் வரை மீள்செலுத்தும் காலம்
- 24 மணித்தியாலத்திற்குள் அங்கீகாரம்

விதிமுறைகளும் நிபந்தனைகளும் பொருந்தும்*

அழையுங்கள் 011 7 756 756 | www.amanabank.lk

அமானா வங்கி (PLC) ஆனது இலங்கை மத்திய வங்கியின் மேற்பார்வையின் கீழ் இயங்கும் அனுமதி பெற்ற ஒரு வர்த்தக வங்கி ஆகும்

இது உங்கள் வங்கி Amãna Bank

## நான்கு...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

மற்றும் குடியகல்வுத் துறையின் துணைக் கட்டுப்பாட்டாளரும் ஊடகப் பேச்சாளருமான மகேஷ் கருணாதாச தெரிவித்துள்ளார்.

ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து வெளியிட்டவர் இதனை குறிப்பிட்டுள்ளார். ஒரு நாள் சேவையின் கீழ் ஒரு நாளைக்கு 1500 முதல் 2000 வரை கடவுச்சீட்டுகளும் வழக்கமான சேவையின் கீழ் சுமார் 1000 கடவுச்சீட்டுகளும் வழங்கப்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடவுச்சீட்டு பெற ஒரு நாள் சேவைக்கு 20,000 ரூபாவும் வழக்கமான சேவைக்கு 10,000 ரூபாவும் அறவிடப்படுகிறது. கடவுச்சீட்டிற்கு விண்ணப்பிக்கும் போது தேசிய அடையாள அட்டையில் ஏதேனும் தெளிவின்மை இருந்தால், கால தாமதங்கள் ஏற்படக்கூடும்.

எனவே, கடவுச்சீட்டிற்கு விண்ணப்பிக்கும் போது மக்கள் தங்கள் தேசிய அடையாள அட்டை மற்றும் பிறப்புச் சான்றிதழில் கவனம் செலுத்தி, அவை தெளிவாக இருப்பதை உறுதி செய்ய வேண்டும்.

16 வயதில் அடையாள அட்டைக்கு விண்ணப்பிக்கும் நபர்களுக்கு பல ஆண்டுகளில் பின் உடல் வடிவமைப்பில் மாற்றங்கள் ஏற்படுவதனை கருத்தில் கொண்டு 10 ஆண்டுகளுக்கு கடவுச்சீட்டு வழங்கப்படும்.

மேலும் ஒரு நாள் சேவை மற்றும் வழக்கமான சேவையின் கீழ் ஒரு நாளைக்கு சராசரியாக 4000 முதல் 5000 வரை அடையாள அட்டைகள் வழங்கப்படுவதமாக என குடிவரவு மற்றும் குடியகல்வுத் துறையின் துணைக் கட்டுப்பாட்டாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

## அடுத்த வாரம்...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

முனீர் முலாபர் தெரிவித்துள்ளார் .

இதேவேளை களுவாஞ்சிக்குடி நீதவான் நீதிமன்றத்தின் உத்தரவின் பேரில் குறித்தஅகழ்வுப் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

குறித்த அகழ்வுப் பணிகள் தொடர்பான ஆரம்பகட்ட நடவடிக்கைகளை ஆராய்வதற்காக கடந்த வியாழக்கிழமை (11) காணாமல் போனோர் தொடர்பான அலுவலகத்தின் அதிகாரிகள் விஜயம் மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## பொதுப்...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

தராதர (சாதாரண தரப்) பரீட்சை 2026-02-17 முதல் 2026-02-26 வரை நடைபெறும் என கல்வி அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2026 ஆம் ஆண்டுக்கான கல்வி பொது தராதர (உயர்தரப்) பரீட்சை 2026-08-10 முதல் 2026-09-05 வரை நடைபெற உள்ளது.

அதேநேரம் 2026 ஆம் ஆண்டுக்கான, தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை 2026-08-09 திகதியன்று இடம்பெறவுள்ளது.

2026 ஆம் ஆண்டுக்கான க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை 2026-12-08 முதல் 2026-12-17 வரை நடைபெறும் என்றும் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

## உரிமைகளை...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

இல்லத்திலிருந்து கால்டன் இல்லத்தை சென்றடைந்த முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் தனியார் ஊடகமொன்று நடத்திய விசேட நேர்காணலின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன் போது, அரசியல், பொருளாதாரம், யுத்த வெற்றி உள்ளிட்ட பல விடயங்களைப் பற்றிய கருத்துக்களை அவர் தெரிவித்தார்.

தற்போது கால்டனில் வசித்தாலும், தேவை ஏற்படும் பட்சத்தில் கொழும்புக்கு விரைந்து வர தயாராக இருப்பதாக அவர் தெரிவித்தார்.

மேலும், தம் மீதான விமர்சனங்கள் தொடர்பாக கவலையடைய தேவையில்லை என்றும்அவர் தெரிவித்துள்ளார்.

விரைவில் நாட்டு அரசியலில் பாரிய சுழல்காற்று வீசக்கூடும் எனவும் அவர் எச்சரிக்கை விடுத்தார்.

எனவே, இளைஞர்கள் முறையற்ற செயல்களில் ஈடுபடாமல், ஜனநாயக ரீதியில் தமது உரிமைகளை வென்றெடுக்க வேண்டும் என முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கோரிக்கை விடுத்துள்ளார்.

## ஐ.நா...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

திகதி அமெரிக்காவிற்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளார்.

தனது பயணத்தின் போது, ஜனாதிபதி பல நாட்டுத் தலைவர்கள் மற்றும் அரச அதிகாரிகளுடன் இருதரப்பு கலந்துரையாடல்களில் ஈடுபடவுள்ளதோடு மேலும் ஐ.நா. பொதுச்செயலாளர் அன்டோனியோ குட்டெரெஸை யும் சந்திக்கவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவில் தனது பணிகளை முடித்த பின்னர், ஜப்பான் அரசாங்கத்தின் அழைப்பின் பேரில், செப்டம்பர் 26 ஆம் திகதி ஜப்பானுக்கு அரசு முறைப் பயணம் மேற்கொள்ளவுள்ளார்.

ஜப்பானில் இருக்கும் போது, இந்த மாதம் 27 ஆம் திகதி இடம்பெறவுள்ள சர்வதேச வர்த்தக கண்காட்சியில் கலந்து கொண்டு, சிரேஷ்ட ஜப்பானிய அதிகாரிகளுடன் உயர் மட்ட கலந்துரையாடல்களை நடத்தவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அடுத்த ஆண்டு...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

செலுத்தப்பட்டுள்ளது.

பழைய தேர்தல் முறையின் கீழ் அப்போதைய் அரசாங்கம் விகிதாசார தேர்தல் முறையை மாகாண சபைகளுக்கு அறிமுகப்ப டுத்தியது.

அதன் விளைவாக புதிய எல்லை நிர்ணயங்களை மேற்கொள்ள வேண்டிய தேவை ஏற்பட்டது. தற்போது பழைய முறைப்படி தேர்தல்களை நடாத்துவதான யின் எல்லை நிர்ணயமொன்று அவசியமில்லையென சுட்டிக்காட்ட ப்பட்டுள்ளது.

இந்த நிலையில் அடுத்த ஆண்டு ஆரம்பத்தில் மாகாண சபைத் தேர்தல்களை நடாத்துவது குறித்து அரசு அவதானம் செலுத்தப்பட்டிருப்பதாக உயரதிகாரிமொருவர் தெரிவித்தார்.

2014 ஆம் ஆண்டே கடைசியாக மாகாண சபைத் தேர்தல் நடாத்தப்பட்டது.

ஜெனீவாவில் நடைபெற்ற மாநாட்டில் இந்தியா வடக்கு கிழக்கில் தே ர்தலை நடாத்தி தமிழ் மக்களுக்கு அதிகாரத்தை வழங்குவது குறித்து வலியுறுத்தியிருபதாக தெரிவிக்கப் படுகிறது.

இது குறித்து அரசின் தீர்மானம் விரைவில் வெளியாகுமென்றும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

## 100 வீதம்...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

2023 (2024) மற்றும் 2024 க.பொ.த. உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் நாட்டின் ஒவ்வொரு மாவட்டத்தையும் உள்வாங்கும் வகையில், ஒவ்வொரு பாடத்துறையின் கீழும் சிறந்த திறமைகளை வெளிப்படுத்திய மாணவர்களைக் கௌரவிப்பதற்கு ஜனாதிபதி நிதியம் எடுத்த தீர்மானத்திற்கு அமைய, சிறந்த திறமைகளை வெளிப்படுத்திய மாணவர்களைக் கௌரவிப்பதற்கான, மத்திய மாகாண நிகழ்வில் கலந்துகொண்டு செப்டம்பர் 14ஆம் திகதி கண்டி மாவட்ட செயலகத்தில் பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய இதனைத் தெரிவித்தார்.

இதன்போது சிறந்த திறமைகளை வெளிப்படுத்திய மாணவர்களுக்குப் பிரதமர் அவர்களால் சான்றிதழ்கள் வழங்கி வைக்கப்பட்டது.

2023 (2024) மற்றும் 2024 க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் ஒவ்வொரு பாடத்துறையின் கீழும் சிறந்த திறமைகளை வெளிப்படுத்திய மாணவர்களுக்கும் அவர்களது பெற்றோர்களுக்கும் வாழ்த்து தெரிவித்த பிரதமர், அவர்களுக்குக் கிடைத்த இந்த வாய்ப்பானது நாட்டின் எதிர்கால மாற்றத்திற்குத் தேவையான பங்களிப்பையும் தலைமைத்துவத்தையும் பெற்றுத்தரக் காரணமாக அமையும் என எதிர்பார்ப்பதாகத் தெரிவித்தார்.

இங்கு மேலும் கருத்து தெரிவித்த பிரதமர்,

”ஜனாதிபதி நிதியம் பற்றிப் பேசும்போது அதைத் தவறாகப் பயன்படுத்தப்பட்ட விதம் பற்றியே அதிகம் கேள்விப்படுகிறோம். வரப்பிரசாதம் பெற்ற ஒரு குழுவினரால் அவர்களது சலுகைகள் மற்றும் நலன்களை அதிகரித்துக்கொள்ளவே இந்த நிதியம் தவறான முறையில் பயன்படுத்தப்பட்டு வந்திருந்தது.

ஆயினும் இன்று அந்த நிலைமை முற்றிலும் மாறி, ஜனாதிபதி நிதியத்தின் உண்மையான நோக்கத்திற்காக அதை 100% பயன்படுத்துவதையிட்டு நாம் மகிழ்ச்சியடைகிறோம். இந்த நிதியம் இப்போது மக்களுக்கு நெருக்கமாகி, மக்கள் தங்கள் பிரதேசத்திலேயே அதனை எளிதாகப் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கின்றது.

அதேபோல், மனித வளத்தை மேம்படுத்துவதை அரசாங்கம் தனது முதன்மைப் பணியாக அடையாளம் கண்டுள்ளது. அந்த நோக்கத்துடனேயே நாம் கல்வியில் முதலீடு செய்கிறோம். அந்த முதலீடானது பண ரீதியில் மட்டுமன்றி ஏனைய அனைத்துத் துறைகளிலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

மாறிவரும் உலகில் வித்தியாசமான விதத்தில் சிந்திக்கக்கூடிய, ஒரு விடயத்தின் அனைத்துப் பக்கங்களையும் பார்க்கக்கூடிய, உலகத்தை மாற்றக்கூடிய மனிதநேயம் மிக்க குடிமக்களை உருவாக்குவதற்கே நாம் முயற்சிக்கிறோம்.”

இந்த நிகழ்வில் உரையாற்றிய பாராளுமன்றத்தின் கௌரவ சபாநாயகர் வைத்தியர் ஜகத் விக்ரமரத்ன அவர்கள்,

“ஜனாதிபதி நிதியம் என்பது மக்களின் நிதியம், அதேபோன்று அது மக்களின் தனி உரிமையாகும். அதனை முறையாக மக்களிடம் ஒப்படைப்பதே நமது பொறுப்பு.

தற்போது ஏற்பட்டிருக்கும் இந்த ஜனநாயக ரீதியிலான மாற்றத்தின் கீழ், மனித வளத்தை அபிவிருத்தி செய்தல் மிகவும் அவசியமானதாகும். இலங்கை அதிக எண்ணிக்கையிலான இளம் வயதினரைக் கொண்ட ஒரு நாடாகும். ஆகையினாலே, அந்த மாற்றத்தை அடைய இந்த அரசாங்கம் உங்களுக்காக அந்த கல்விச் சூழலை உருவாக்கி வருகிறது” என தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் கருத்து தெரிவித்த போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் பிரதி அமைச்சர் வைத்தியர் பிரசன்ன குணசேன, ”கோப்புகளுக்கு மட்டுப்படுத்தப்பட்ட சான்றிதழ்கள், தகுதிகளுக்கு அப்பால், சமூக உணர்வுள்ள, சமூகப் பிரச்சினைகள் குறித்து சிந்திக்கக்கூடிய, நாடும் சமூகமும் எதிர்பார்த்து நிற்கின்ற மாணவர் சமுதாயம் ஒன்று உருவாக வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும்” என தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் பாராளுமன்ற கௌரவ சபாநாயகர் வைத்தியர் ஜகத் விக்ரமரத்ன, மத்திய மாகாண ஆளுநர் பேராசிரியர் எஸ்.பி.எஸ். அபயகோன், கல்வி மற்றும் உயர்கல்வி பிரதி அமைச்சர் வைத்தியர் மதுர சேனவிரத்ன, புத்தசாசன, மத மற்றும் கலாசார அலுவலக பிரதி அமைச்சர் கமகேதர திசாநாயக்க, போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் பிரதி அமைச்சர் வைத்தியர் பிரசன்ன குணசேன, சுகாதார மற்றும் வெகுஜன ஊடக பிரதி அமைச்சர் கலாநிதி ஹன்சக விஜேமுனி மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள், ஜனாதிபதி நிதியத்தின் நிர்வாக சபை அதிகாரிகள், நிர்வாகத் துறை அதிகாரிகள், பாடசாலை மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் கலந்துகொண்டனர்.




## கட்டார்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெளியிட்டுள்ள அனைத்து அறிக்கைகளும், அதிகாரபூர்வமான கருத்துக்களும் இஸ்ரேலுக்கு அதன் மிலேச்சத்தனத்தையும், அடாவடித்தனத்தையும் நீடிக்கவும், அதன் நீண்டகால ஆக்கிரமிப்பை மேலும் தொடரவும், பிராந்திய ஸ்திரத்தன்மைக்குள்ள அச்சுறுத்தலை அதிகரிக்கவும் வாய்ப்பான விதத்தில் அரசாங்கத்தினதும், வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சினதும் நீண்டகால இயலாமையை வெளிப்படுத்துவதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர்,பாராளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீம் ,அவரது அறிக்கையில் மேலும் தெரிவித்திருப்பதாவது,

கட்டாரை இஸ்ரேல் தாக்கிய சந்தர்ப்பத்தில்,ஈரானில் நடைபெற்ற 50 க்கு மேற்பட்ட நாடுகளின் பிரதிநிதிகள் பங்குபற்றிய பலஸ்தீனம் தொடர்பான உலக இஸ்லாமிய ஒருமைப்பாட்டு மாநாட்டில் கலந்துகொண்டு நான் தெஹ்ரான் நகரில் இருந்தேன்.

அங்கிருந்து நாடு திரும்பும் போதுதான் ,கட்டார் மீதான இஸ்ரேலின் தாக்குதலையடுத்து, இலங்கையின் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு வெளியிட்டுள்ள உப்புச் சப்பற்ற அறிக்கையொன்றைக் கண்ணுற்றேன்.அதன் ஊடாக,ஓர் ஆக்கிரமிக்கும் நாட்டையும் ஆக்கிரமிக்கப்பட்டுவரும் நாட்டையும் வேறுபடுத்திப் பார்க்கக்கூடிய அளவுக்குக் கூட இந் நாட்டு அரசாங்கம் திராணியற்றது என்பதை மீண்டும் ஒருமுறை நிரூபித்துள்ளதோடு,ஒரு வான்வழித் தாக்குதலுக்கும், வெறும் சம்பவத்திற்கும் இடையிலுள்ள வேறுபாடு அல்லது அதை விடவும் மோசமாக, ஒரு கூலிப்படையின் நடத்தைக்கும்,அதன் விளைவாக பாதிக்கப்பட்டவர்களின் மத்தியில் இயல்பாகக் காணப்படும் ஒருமைப்பாட்டிற்கும் இடையிலான உணர்வுபூர்வமான தன்மையைக் கூட அரசாங்கம் கண்டுகொள்ளாது இருப்பதை அறிந்து கொண்டேன்.

நெதன்யாகு அரசாங்கத்தின் கொஞ்சம் கூட மனசாட்சியற்ற மற்றும் கீழ்த்தரமான அத்துமீறல்கள், மனிதநேயம் கண்ணியம், சர்வதேச சட்டத்தின் விழுமியங்கள் மற்றும் பிற நாடுகளின் இறையாண்மை ஆகியவற்றை மீறும் போது இலங்கை அரசாங்கத்தின் வெறுமனே புதினம் பார்த்துக் கொண்டிருக்கும் வெறிச்சோடித்தனம்,அறவே பொறுப்புணர்ச்சியற்ற தன்மை மற்றும் கொடூரமான குற்றங்கள் தோய்ந்த கலாசாரத்தின் ஆழ,அகலத்தையும் இது அம்பலப்படுத்தியுள்ளது.

துரதிர்ஷ்டவசமாக, நாட்டில் பொறுப்புணர்ச்சியுடனான நிர்வாகக் கட்டமைப்பையும், கலாசாரத்தையும் உருவாக்குவதென்ற உறுதிமொழியின் பேரில் ஆட்சிக்கு வந்துள்ள இந்த அரசாங்கம் இவ்வாறு மிகவும் பொடுபோக்காக நடந்து கொள்வது கவலைக்குரியது.

அனைத்து விதமான அளவுகோல்களைக் கொண்டு மதிப்பீடு செய்தாலும்,இவ்வாறான தான்தோன்றித்தனமான போக்கினால் இலங்கை அரசாங்கம் மிகவும் மோசமான தோல்வியைத் தழுவிக்கொள்கின்றது.இஸ்ரேலை பொறுத்தவரை அரசாங்கத்தின் ”சமாளிப்பு” மிகவும் விசனமளிப்பதாக உள்ளது.

நெதன்யாகு அரசாங்கத்தின் இனப்படுகொலை நடவடிக்கைகள், வன்முறைக் கலாசாரம், ஆக்கிரமிப்பு மற்றும் பேரழிவு தரக்கூடிய யுத்த நடவடிக்கைகள் பிராந்தியத்திலும்,ஏனைய நாடுகள் சிலவற்றிலும் அமைதியின்மையை ஏற்படுத்தியிருப்பதை சமாதானத்தை விரும்பும் உலக மக்கள் இரத்தம் தோய்ந்த இதயங்களுடன் நோக்க வேண்டிய நிலைமை நேர்ந்திருக்கின்றது. சந்தேகத்திற்கு இடமின்றி இஸ்ரேலின் ஈனச் செயல்கள் யாவும் பாரதூரமாகக் கண்டிக்கத்தக்கவை

ஆக்கிரமிக்கப்பட்ட பாலஸ்தீன பிரதேசங்களில், குறிப்பாக காஸாவில் இழைக்கப்பட்டுவரும் மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள் தொடர்பாக மட்டுமல்லாமல், கடந்த ஜூன் மாதம் ஈரான் வரை நீடிக்கப்பட்ட போர் குற்றங்கள் தொடர்பாகவும், இப்போது கட்டாரில் அமைதிப் பேச்சுவார்த்தை நடந்த நிலையில் மேற்கொள்ளப்பட்ட வான்வழி தாக்குதல் மற்றும் படுகொலைகள் தொடர்பாகவும் நெதன்யாகுவின் அரசாங்கத்தை அந்த நாட்டின் பெயரைக் குறிப்பிட்டு கண்டிக்காமல், இலங்கை அரசாங்கம் தவிர்ந்து கொண்டிருப்பது ஓர் இஸ்ரேல் சார்பு தந்திரோபாய அல்லது மூலோபாய நடவடிக்கையா என்ற பலத்த சந்தேகத்தைத் தோற்றுவித்திருக்கின்றது.

குறிப்பாக, கட்டார் மீதான தாக்குதல் குறித்த சமீபத்திய அறிக்கை உட்பட, இந்த அரசாங்கம் வெளியிட்டுள்ள அனைத்து அறிக்கைகளும் , அதிகாரபூர்வமான கருத்துக்களும் இஸ்ரேலுக்கு அதன் மிலேச்சத்தனத்தையும்,அடாவடித்தனத்தையும் நீடிக்கவும், அதன் நீண்டகால ஆக்கிரமிப்பை மேலும் தொடரவும், பிராந்திய ஸ்திரத்தன்மைக்குள்ள அச்சுறுத்தலை அதிகரிப்பதற்கும் வாய்ப்பாக அரசாங்கத்தினதும், வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சினதும் நீண்டகால இயலாமையை வெளிப்படுத்துகின்றன.

வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் பிந்திய அறிக்கையைப் படிக்கும் எந்தவொரு நியாயமான பிரஜையும் அத்தகைய அறிக்கைகளை தயாரிப்பது வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சிலோ அல்லது அரசாங்கத்திலோ உள்ள இஸ்ரேலிய ”மறைகரம்”என்பதைத் தவிர வேறில்லை என்று முடிவுக்கே வருவார்கள்.

ஒரு சராசரி இலங்கை பிரஜை, கட்டார் தாக்குதலின் பின்னர் வெளியிடப்பட்டுள்ள அரசாங்கத்தின் அக்கறையற்ற, ஒருதலைப்பட்சமான, திரிபுபடுத்தப்பட்ட அறிக்கையை புரிந்துகொள்ள முடியாத அளவுக்கு உணர்ச்சியற்றவராகவும், நியாயமற்றவராகவும் இருக்க மாட்டார் என்பது நிச்சயம்.

வெளிநாட்டு வேலை வாய்ப்பு,உள்நாட்டு முதலீடு, வர்த்தகம் மற்றும் சுற்றுலாவுத் துறைக்கு எங்களுக்கு கட்டார் தேவை, இது சவுதி அரேபியா, ஐக்கிய அரபு இராச்சியம், குவைத், ஓமான்,ஜோர்தான்,லெபனான் மற்றும் பஹ்ரைன் ஆகியவற்றின் ஒத்துழைப்புகளுடன், நாட்டிற்கு மிகவும் தேவையான அந்நியச் செலாவணியை வெகுவாக ஈட்டித்தருகின்றது.

ஜெனீவாவில் மனித உரிமைகள் மாநாட்டு அமர்வின் போது இலங்கைக்கு ஆதரவாகப் பேச வளைகுடா ஒத்துழைப்பு அமைப்பின் உதவியைப் பெறுவதையும் இது சிக்கலுக்கு உள்ளாக்கலாம். அமைச்சர் பிமல் ரத்நாயக்க, சவூதி அரேபியாவிற்கு விஜயம் செய்து, இலங்கையில் குறிப்பிட்ட சில செயற் திட்டங்களுக்கு நிதி உதவியைக் கோரிவிட்டு, சமீபத்தில்தான் நாடு திரும்பியிருக்கிறார்.

இவ்வாறிருக்க, அந்த மத்திய கிழக்கு நாடுகளில் ஒன்று இலக்கு வைக்கப்பட்ட வான்வழித் தாக்குதல்களால் ஆக்கிரமிப்புக்கு உள்ளாகும்போது, இலங்கை அரசாங்கம் ஆக்கிரமிப்பாளரின் பெயரைக் குறிப்பிடவோ அல்லது இறையாண்மை மிகவும் வெளிப்படையாக மீறப்பட்ட நாட்டின் அரசாங்கத்தின் மற்றும் மக்களின் உணர்வுகளை எவ்வாறு பகிர்ந்து கொண்டது என்பதைப் பற்றிப் பேசவோ கூட துணிவதில்லை என்பது ஒரு வேதனையான உண்மையாகும்.

இஸ்ரேலின் கடுமையான அத்துமீறல்களை வெறும் சம்பவங்கள் அல்லது தாக்குதல்கள் என்று வெறுமனே பட்டும் படாமலும் அழைப்பதன் மூலம், ”இஸ்ரேல் தான் இதைச் செய்தது” என்று துணிச்சலான கருத்துக்களை திட்டவட்டமாக முன்வைக்க முடியாமல் , அரசாங்கத்தையும்,வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சையும் அவ்வாறு செய்ய விடாமல் தடுப்பது யார்?

இந்த நிலைமை நீடித்தால், இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கை பொறிமுறை வெறும் கேலிக் கூத்தாக மாறுவதைத் தவிர்க்க முடியாது போய்விடும் என்றுள்ளது.

## இஸ்ரேலின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நமது சகோதர பாலஸ்தீன மக்கள் மீது தொடர்ந்து நடத்தி வரும் அழிப்புப் போருக்கும், அவர்களை அவர்களின் நிலத்திலிருந்து வெளியேற்றுவதை நோக்கமாகக் கொண்டவர்களுக்கும் எந்தப் பலனும் கிடைக்காது என்பதை இஸ்ரேல் அறிந்து கொள்ள வேண்டும் என்றும் அல் தானி குறிப்பிட்டுள்ளார்.

காஸா போரை முடிவுக்கு கொண்டுவர எடுக்கப்படும் முயற்சிகளை சீர்குலைக்க இஸ்ரேலை அனுமதிக்க முடியாது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அரபு மற்றும் இஸ்லாமிய தலைவர்களின் அவசர உச்சி மாநாடு ஒன்றை கட்டார் திங்கட்கிழமை 15 ஆம் திகதி ஏற்பாடு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பல்கலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பதிவாளர் மற்றும் உதவி நிதியாளர் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்காக நடாத்தப்பட்ட மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையின் தமிழ் மொழி மூல வினாத்தாள்களில் மொழிபெயர்ப்பு தவறு இடம்பெற்றிருந்தமையால் தமிழ் மொழி மூல பரீட்சார்த்திகள் பாதிக்கப்பட்டிருப்பதாக ஜனாதிபதி, கல்வி அமைச்சர் ஆகியோரதும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினதும் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் கடந்த ஆகஸ்ட் மாதம் 23, 24, 30, 31 ஆம் திகதிகளில்

கொழும்பில் தமிழ், சிங்களம் மற்றும் ஆங்கில மொழி மூலம் நடாத்தப்பட்டது. இதன்போது சிங்கள, ஆங்கில மொழி மூல வினாக்களுக்கும் தமிழ்மொழி மூல வினாக்களுக்கும் இடையே பாரிய மொழி பெயர்ப்பு தவறுகள் இடம்பெற்றிருந்தமை காரணமாக தம்மால் திருப்தியாக விடை எழுத முடியாமல் போனதாக தமிழ் மொழி மூல பரீட்சாத்திகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

பொதுவாக அரசாங்க பொதுப் பரீட்சைகள் தொடர்பான வினாக்கள் சிங்கள மொழி மூலம் தயாரிக்கப்பட்டு பின்னர் ஆங்கிலம் மற்றும் தமிழ் மொழிகளுக்கு மாற்றம்

செய்யப்படுகிறது. மொழிகளுக்கிடையே ஏதும்

ஒவ்வாமை காணப்பட்டால் சிங்கள மொழி மேலோங்கும் என அரசியலமைப்பில் கூறப்பட்டுள்ளது.


இந்நிலையில் வினாத்தாள்களில் ஏற்பட்ட மொழிபெயர்ப்பு தவறினால் இப்பரீட்சையில் சில புள்ளிகள் குறைவாகப் பெற்று, வெட்டுப் புள்ளிகள் தீர்மானிக்கப்படும் போது தாம் பாதிக்கப்படலாம் என்று அவர்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம், வவுனியா, கிழக்கு, தென்கிழக்கு பல்கலைகளிலிருந்து தமிழ் மொழி மூலம் தோற்றிய பரீட்சார்த்திகளுக்கே இந்நிலைமை ஏற்பட்டுள்ளது.

பரீட்சைகள் தொடர்பான 1968 ஆம் ஆண்டின் பொதுச்சட்டம் மற்றும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் ஆலோசனை பெறப்பட்டு உடனடித் தீர்வு வழங்கப்பட வேண்டும் எனத் தெரிவிக்கப்படுவதுடன் அதுவரை புள்ளிகள் வெளியிடப்படக் கூடாது எனவும் மொழிபெயர்ப்பு தவறு காரணமாக வினாத்தாள்களில் ஏற்பட்ட பிரச்சினைகளுக்கு தீர்வாக குறித்த வினாக்களுக்கு விடை எழுதிய சகல பரீட்சார்த்திகளுக்கும்

அவ்வினாக்களுக்கு வழங்கப்பட வேண்டிய முழுப்புள்ளிகளும் வழங்கப்பட வேண்டும்

எனவும் கோரிக்கை விடுக்கப்படுகிறது.



www.uthayam.lk
உதயம்
சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்
2025 SEPTEMBER 15 - MONDAY
WEB: www.uthayam.lk
E-mail: editor.uthayam@gmail.com
FB ID: உதயம்

# மாகாண சபை தேர்தல்களை உடன் நடத்துக

பல வருடங்களாக நடத்தப்படாதிருக்கும் மாகாண சபை தேர்தல்களை பழைய தேர்தல் முறையின் கீழ் நடாத்துவது குறித்து அரசாங்கம் ஆராய்ந்து வருவதாக தகவல்கள் வெளியாகி உள்ளன. புதிதாக எல்லை நிர்ணயத்தை மேற்கொண்ட பின்பே தேர்தலை நடாத்துவதாக அரசு முன்பே தெரிவித்திருந்த போதும் இந்தியா உட்பட பல வெளிநாடுகள் தேர்தல் நடாத்துவதன் அவசியத்தை வலியுறுத்தியதன் அடுத்தே பழைய முறையில் தேர்தல் நடாத்துவது குறித்து அரசாங்கம் பரிசீலித்து வருவதாக சிரேஷ்ட அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார். தேசிய மக்கள் சக்தி அரசு பதவியேற்று ஓராண்டு நிறைவு பெறும் நிலையில் தேர்தலொன்றை நடாத்துவதன் மூலம் அரசுக்கு மக்களது ஆதரவு எப்படி இருக்கிறது என்பதை பரீட்சிக்கும் வாய்ப்பும் கிடைப்பது குறிப்பிடத்தக்கது. நாட்டின் சட்டத்தில் ஓர் அங்கமாக இருக்கும் மாகாண சபைகள் 2014 ஆம் ஆண்டுக்கு பிறகு மக்கள் பிரதிநிதிகள் இல்லாமலேயே இயங்கி வருகின்றன. 11 வருடங்களாக அரச அதிகாரிகளினாலேயே மாகாண சபைகள் நிர்வகிக்கப்படுகின்றன. மாகாணசபை முறை நாட்டு அரசியலமைப்பின் ஒரு அத்தியாவசியமான அங்கமாக இருந்த போதும் அது உருவாக்கப்பட்ட நோக்கம் இப்போது தலைகீழாக மாறியுள்ளது.

வடகிழக்கு மாகாணங்களுக்கு அதிகார பரவலாகம் மிக முக்கியமானது. 13 வது அரசியல் அமைப்புத் திருத்தத்தின் பிரகாரம் உருவாக்கப்பட்ட மாகாண சபை முறை இனப் பிரச்சினைகளுக்கு ஒரு தீர்வாகவே முன்வைக்கப்பட்டது. நீண்ட கால யுத்தத்துக்கு பிறகு தமிழ் பேசும் மக்களுக்கு ஒரு தீர்வாகத் தான் அப்போதைய ஜே ஆர் ஜயவர்த்தன அரசு மாகாண சபைகளை உருவாக்கியது. இதன் உண்மையான நோக்கம் இதுவரை சரியாக நிறைவேற்றப்படவில்லை. இந்த நிலையிலே மாகாண சபை தேர்தல்களை நடாத்துவதன் அவசியம் பற்றி அண்மையில் ஜெனிவாவில் நடைபெற்ற ஐ நா மனித உரிமை ஆணைக்குழு கூட்டத்திலும் வலியுறுத்தப்பட்டுள்ளது. இலங்கை அரசு விரைவாக மாகாண சபை தேர்தல்களை நடத்த வேண்டும் என்று இந்திய பிரதமர் இக்கூட்டத்தில் வலியுறுத்தியுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. அரசாங்கம் பழைய முறைப்படி தேர்தலை நடாத்தி மாகாண சபை நிர்வாகத்தை மக்கள் பிரதிநிதிகளின் கையில் அளிப்பது முக்கியமானதாகும். 1988 ஆம் ஆண்டின் மாகாண சபை தேர்தல் முறை 2017 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட திருத்தங்களின் மூலம் பல அங்கத்தவர் தொகுதி முறை உருவாக்கப்பட்டது. எனினும் அதில் தேர்தல் தொகுதி எல்லை நிர்ணயங்கள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. உதாரணமாக மாகாண சபை தேர்தல்கள் நடாத்தப்படாது ஒத்திப்போடப்பட்டு கொண்டே இருந்தது.

தேர்தல் சட்டத்தில் ஒரு சிறிய மாற்றத்தை ஏற்படுத்துவதன் மூலம் பழைய முறையில் தேர்தலை நடத்த முடியும். அரசு அதற்குரிய தேவையான மாற்றங்களை செய்து மாகாண சபை தேர்தலை குறைந்தபட்சம் அடுத்த ஆண்டின் ஆரம்பத்திலாவது நடாத்துவது சிறந்தது. அதற்கான நடவடிக்கைகளை அரசு எடுக்க வேண்டும். சர்வதேச சமூகம் இந்த விடயத்தில் அழுத்தம் கொடுப்பதனால் அரசு இதில் தாமதிப்பது சிறந்ததல்ல.

# தர்கா நகரில் மாணவர் கௌரவிப்பு நிகழ்வு





(பீ.எம் முக்தார்)

தர்கா நகர் நஜீப் ஹாஜியார் கல்வி நிலையம் ஏற்பாடு செய்த தர்கா நகரில் உள்ள மூன்று பாடசாலைகளில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் (2025) சித்தியடைந்த மாணவர்களை கௌரவிக்கும் விழா 14 ஆம் திகதி (14.09.2025) மேற்படி கல்வி நிலையத்தில் மிக விமர்சையாக நடைபெற்றது.

நஜீப் ஹாஜியார் கல்வி நிலைய ஸ்தாபகர் கலாநிதி. நஜீப் ஹாஜியார் பின் அமீர் ஆலிம் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

தர்கா நகர் ஸாஹிரா ஆரம்ப பாடசாலை, அல்-ஹம்ரா மகா வித்தியாலயம், அளுத்கம வீதிய முஸ்லிம் மகளிர் தேசிய பாடசாலைகளில் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த 31 மாணவர்களே நிகழ்வில் பரிசு வழங்கி கௌரவிக்கப்பட்டவர்களாவர்.

பேருவளை மொல்லியமலை ஹிழ்ரியா ஜும்ஆ பள்ளிவாசல் பிரதம ஹதீபும் கெச்சிமலை அஷ்ரபிய்யா அரபுக் கல்லூரி பழைய மாணவர் சங்கத் தலைவருமான மௌலவி அல் ஹாஜ் எம்.எஸ்.எம் பாஸில் (அஷ்ரபி - அம்ஜதி) விஷேட பேச்சாளராக கலந்து கொண்டு இஸ்லாம் மார்க்கம் கல்விக்கு வழங்கியுள்ள முக்கியத்துவம் தொடர்பாக விளக்கமாக எடுத்துக் கூறினார்.

தர்கா நகர் அல் ஹம்ரா மகாவித்தியாலய அதிபர் திருமதி பஸ்லியா பாஸி, ஸாஹிரா ஆரம்பப் பாடசாலை அதிபர் எம்.எச்.எம் ஸக்வான் தர்கா நகர் இஸ்லாமிய நலன் புரிச்சங்கத் தலைவர் ஏ.பீ.எம் ஸுஹைர் ஹாஜியார், பேருவளை பிரதேச சபை முன்னாள் உறுப்பினர் ஹஷீப் மரிக்கார், இலங்கை வங்கியின் இந்தியா கிளையின் முன்னாள் முகாமையாளரும் கவிஞருமான தர்கா நகர் ரீ.எம் ஸபா, தேசிய மக்கள் சக்தி தர்கா நகர் பிரதேச முக்கியஸ்தர்களான பஸ்மின் பைஸர், முஹம்மத் ஹிராஸ், பேருவளை உதைப்பந்தாட்டச் சங்க பொருளாலர் ஏ.ஜே.எம் அக்பர், பேருவளை பிரதேச சபை முன்னாள் உப தலைவர் எம்.எச்.எம் ஹுஸைமத், சமூக முஹம்மத் மஸுத் சித்தியடைந்த மாணவர்கள் அவர்களது பெற்றோர்கள், ஊர் பிரமுகர்கள், நஜீப் ஹாஜியார் கல்வி நிலைய பணிப்பாளர், சபை உறுப்பினர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# பாராளுமன்ற கூட்டங்களில் குறைவாக கலந்து கொண்ட பைஸர் முஸ்தபா

பாராளுமன்ற கூட்டங்களில் கலந்து கொண்ட பாராளுமன்ற உறுப்பினர்களில் குறைந்த நாட்கள் பாராளுமன்றத்துக்குச் சென்ற ஒருவராக பைஸர் முஸ்தபா திகழ்கிறார். ஜனநாயக தேசிய அமைப்பின் சார்பில் பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் பைஸர் முஸ்தபா 24 நாட்கள் மட்டுமே பாராளுமன்றத்துக்கு வருகை தந்திருப்பதாக பெரிட்டாஸ் நிறுவனம் வெளியிட்டு இருக்கின்ற அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதே நேரம் ஜனநாயக தேசிய முன்னணிக்கு கிடைக்கப்பெற்ற மற்றொரு பாராளுமன்ற உறுப்பினர் பதவிக்கு நியமிக்கப்பட்ட ரவி கருணா நாயக்க 63 நாட்கள் பாராளுமன்ற கூட்டங்களில் கலந்து கொண்டிருப்பதாக அந்த அறிக்கை தெரிவிக்கின்றது.
மற்றொரு தமிழ் பேசும் பாராளுமன்ற உறுப்பினரான பரணி திகாம்பரம் இந்த ஆண்டு வெறும் 15 நாட்கள் மட்டுமே பாராளுமன்றத்துக்கு வந்துள்ளதாக புள்ளி விபரங்களின் மூலம் தெரியவந்துள்ளது. பழணி திகாம்பரம் லங்கா ஐக்கிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் தலைவர் ஆவார்.







# திறனொளியின் "திறமைக்கான தேடல் - 2025"-கலை இலக்கிய மாநாடு







**( ஐ. ஏ. காதிர் கான் )**

சம்மாந்துறை - திறனொளி கலை கலாசார ஊடக வலையமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்ட திறனொளியின் "திறமைக்கான தேடல் - 2025" கலை இலக்கிய மாநாடும், "திறனொளியின் முத்துக்கள் 57" கவிதைத் தொகுப்பு நூல் வெளியீடும், சம்மாந்துறை அப்துல் மஜீத் மண்டபத்தில் கடந்த 30ம் திகதி சனிக்கிழமை இடம்பெற்றது.

அமைப்பின் ஸ்தாபகத் தலைவர், "பிறை எப்.எம்." வானொலி அறிவிப்பாளர் ஏ.சீ. நௌஷாத் வழிகாட்டலுடன், சட்டத்தரணி ஏ.எச்.எம். கிபாயத்துல்லாஹ் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில், சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ். எல்.எம். ஹனீபா முன்னிலை அதிதியாகவும், சம்மாந்துறை பிரதேச சபை தவிசாளர் ஐ.எல்.எம். மாஹிர் பிரதம அதிதியாகவும் கலந்து சிறப்பித்தனர். விசேட அதிதிகளாக மாவட்ட கலாசார ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர் ஏ.எல். தௌபீக், கலாசார உத்தியோகத்தர்களான ஜெஸ்மி எம். மூஸா, எம்.எஸ். ஜௌபர் ஆகியோர்களும், இலக்கிய அதிதியாக தென்கிழக்குப் பல்கலைக்கழக தமிழ்த்துறை சிரேஷ்ட பேராசிரியர் கலாநிதி ரமீஸ் அப்துல்லாஹ், இலங்கைத் திறந்த பல்கலைக்கழக விரிவுரையாளர் ஏ.ஆர். அஸாம் உள்ளிட்ட சம்மாந்துறை பிரதேச சபை கௌரவ உறுப்பினர்கள் பலரும் இச்சிறப்பு நிகழ்வில் பங்கேற்றனர்.

நிகழ்வின்போது, அகில இலங்கை ரீதியாகத் தெரிவு செய்யப்பட்ட பல்துறை சார்ந்த கலைஞர்களுக்கு விருதுகளும் சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டதுடன், கலை இலக்கிய ஊடக தலைமைத்துவ பயிற்சிப் பட்டறையில் கலந்து கொண்ட மாணவர்களுக்கான சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டன.

# சிறப்பாக நடைபெற்ற பேருவளை நகர வியாபாரிகளின் ஏற்பாட்டில் மீலாத் விழா





**(பீ.எம் முக்தார்)**

பேருவளை நகர முஸ்லிம் வியாபாரிகள் ஒன்றிணைந்து வருடாந்தம் நடாத்தும் மீலாதுன் நபி விழாவும், புனித ஸுப்ஹான மௌலித் மஜ்லிஸும் பேருவளை நவீன சந்தை தொகுதி மேல் மாடியில் (05) நடைபெற்றது. முகத்தமுஷ் ஷாதுலி முர்தாஜ் ஸமீமின் நெறிப்படுத்தலின் கீழ் நடைபெற்ற இம்மஜ்லிஸில் ஸாதாத்மார்கள், உலமாக்கள், பேருவளை நகர பிதா மபாஸிம் அஸாஹிர், உறுப்பினர் ஸாஹிம் முஹம்மத், தேசிய மக்கள் முன்னணி களுத்துறை மாவட்ட நிறைவேற்றுக் குழு உறுப்பினர் அரூஸ் அஸாத், பொதுச் சுகாதார பரிசோதகள் தாரக பியல், நகர சபை அதிகாரிகள், வர்த்தகர்கள், பிரமுகர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வின் சிறப்பம்சமாக பேருவளை நகரில் இன உறவை கட்டியெழுப்பும் நோக்குடன் சிங்கள வர்த்தகர்களையும் இணைத்து ஏற்பாடு செய்யப்பட் டிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

# அம்பாறை மாவட்ட ஆழ்கடல் மீனவ படகோட்டிகளுக்கான பயிற்சிப்பட்டறை





**(எம்.எஸ்.எம்.ஸாகிர்)**

அம்பாறை மாவட்ட ஆழ்கடல் மீனவர் சங்கம் கல்முனை கிராமிய மீனவர் அமைப்பு ஆகியன இணைந்து நடாத்திய படகோட்டி களுக்கான பயிற்சிப்பட்டறையின் இறுதி நாள் நிகழ்வு கல்முனை மயோன் பிளாஸா மண்டபத்தில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. 03 நாட்கள் இடம்பெற்ற இப்பயிற்சிப்பட்டறையின் இறுதி நாள் நிகழ்வில், தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினரும் அரசியலமைப்புப் பேரவை உறுப்பினரும் அம்பாறை மாவட்ட கரையோரப் பிரதேச செயலகங்களுக்கான ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் அபூபக்கர் ஆதம்பாவா பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

இந்நிகழ்வில், கல்முனை ஆழ்கடல் கிராமிய அமைப்பின் செயலாளரும் தேசிய மக்கள் சக்தியின் கரையோர சங்கங்களின் அமைப்பாளர் எம்.ஜே.எம். ஜெஸீல், அம்பாறை மாவட்ட ஆழ்கடல் மீனவர் சங்கத்தின் தலைவர் எம்.எஸ். அப்துல் ஹமீத், அதன் செயலாளர் மற்றும் பொருளாளர் உட்பட உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

# அட்டாளைச்சேனை முஹம்மட் ஆதிக் கிழக்கு மாகாணத்தின் சிறந்த மெய்வல்லுநர் வீரராகத் தெரிவு

**(றியாஸ் ஆதம்)**

கிழக்கு மாகாண கல்வித் திணைக்களம் மாகாண பாடசாலை களுக்கு இடையில் நடாத்திய மாகாண மட்ட விளையாட்டுப் போட்டியில் அட்டாளைச்சேனை அந்-நூர் மகா வித்தியாலய மாணவன் முஹம்மட் ஆதிக் தான் பங்குபற்றிய மூன்று போட்டிகளிலும் முதலிடத்தினை பெற்று தங்கப் பதக்கங்களை சுவீகரித்துக்கொண்டார்.

கிழக்கு மாகாண பாடசாலை களுக்கிடையிலான மாகாண மட்ட விளையாட்டுப் போட்டி மட்டக்களப்பு வெபர்



விளையாட்டரங்கில் கடந்த ஐந்து நாட்கள் வெகுவிமர்சையாக இடம்பெற்றது.

தனது அதீத திறமையின் மூலம் மொத்தமாக நான்கு தங்கப் பதக்கங்களை சுவீகரித்து தனது பாடசாலைக்கும் அக்கரைப்பற்று வலயத்துக்கும் பெருமை சேர்த்த மாணவன் முஹம்மட் ஆதிக்கை பாடசாலை சமூகம் பாராட்டுவதுடன் அதற்கான சந்தர்ப்பத்தை வழங்கிய பாடசாலை அதிபர் ஏ.எம்.அஸ்மி மாணவனின் வெற்றிக்காக உழைத்த உடற்கல்வி ஆசிரியர் ஆர்.ஹாறூன், பயிற்றுவிப்பாளர் றிஸ்வான் ஆகியோருக்கும் பாடசாலை சமூகம் நன்றியினை தெரிவித்துள்ளது.

# புலமைப் பரிசில் பரீட்சையில் நஜீப் பாத்திமா அஸீமா சித்தி



**(எம்.ரீ. ஆரிப்)**

ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் கலென்பிந்துனுவெவ கல்வி வலயத்திற்குட்பட்ட தகனக்வெவ முஸ்லிம் வித்தியாலயத்தில் இருந்து தோற்றியவர்களில் நஜீப் பாத்திமா அஸீமா என்ற மாணவி 132 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளதார். இவர் ஏ.எம்.நஜீம் (ஆசிரியர்) மற்றும் ஏ.எஃப்.சில்மியா தம்பதிகளின் புதல்வியாவார். இம்மாணவியின் வெற்றிக்கு பாடுபட்ட ஆசிரியர் ஹனீபா றைசுத்தீன் உள்ளிட்ட ஆசிரியர்கள் பாடசாலை அபிவிருத்திச் சங்க நிர்வாக உறுப்பினர்கள் மற்றும் நலன் விரும்பிகளுக்கும் தனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வதாக வித்தியாலய அதிபர் ஏ.ஆர் மர்சூக் தெரிவித்தார் .

# பதுளை அல் ஹிக்மாவின் புலமை பரிசில் வெற்றியாளர்கள்





பதுளை அல் ஹிக்மா ஆபா இம்முறை தரம் ஐந்து புலமை பரிசில் பரீட்சையில் இருபத்தொரு மாணவர்கள் சித்தியடைந்து பாடசாலைக்கு பெருமையீட்டிக் கொடுத்துள்ளனர்.

பதுளை கோட்டத்தில் தமிழ் மொழி மூலம் 182 புள்ளிகளை பெற்று எம்.எஸ்.எச்.மொஹமட் ஷகீ என்ற மாணவன் முதலிடம் பெற்றுள்ளார்.

இது தவிர எம். ஏ.எகப். ஆதிகா 169,எம்.என்.சாஹித் ஹம்தி 154 புள்ளிகளையும் பெற்றுள்ளனர். பெறுபேறுகளை பெற்றுக் கொடுக்க உழைத்த எம். என். ரியாஷா, டி. எகப். ருக்ஷானா, எம்.ஆர்.இர்கபானா ஆகியோருடன் அதிபர் ஏ.ஜே.எம். ரிஸ்வான், பிரதி அதிபர் ஏ.கே.எம்.ஏ.காதர் ஆகியோர் பாராட்டப்பட்டனர்.

# மூட்டை கட்டும் முன்னாள் ஜனாதிபதிகள்



எம்.எஸ். அமீர் ஹுசைன்



ஓய்வுபெற்ற ஜனாதிபதிமார் அனுபவித்து வந்த வரப்பிரசாதங்களை ஒழிக்கும் சட்டமூலம் 2025.09.10 ஆம் திகதி பாராளுமன்றத்தில் 150 மேலதிக வாக்குகளால் நிறைவேறியது. சட்டமூலதிற்கு ஆதரவாக 151 வாக்குகள் கிடைத்தன. பதுளை மாவட்ட புதிய ஜனநாயக முன்னணி உறுப்பினர் சாமர சம்பத் மாத்திரம் சட்டமூலத்திற்கு எதிராக வாக்களித்தார். அதே நேரம் யாழ் மாவட்ட சுயேட்சை குழு உறுப்பினரான இராமநாதன் அர்ஜுனாவும் சட்டமூலத்திற்கு ஆளும் தரப்புடன் இணைந்து ஆதரவாக வாக்களித்தார். ஆளும் தரப்பில் 155 உறுப்பினர்கள் இருந்தாலும் மேலும் நால்வரை காணவில்லை. அத்துடன் வாக்களிப்பு நேரத்தில் எதிர்க் கட்சியில் அங்கம் வகிக்கும் ஐக்கிய மக்கள் சக்தி, பொதுஜனபெரமுன, ஐக்கிய தேசிய கட்சி மற்றும் இலங்கை தமிழரசு கட்சி ஆகியவற்றின் உறுப்பினர்கள் சபையில் இருந்து வெளியேறி இருந்தனர். அத்துடன் முன்னாள் ஜனாதிபதிகளான ஆர் பிரேமதாசா, மஹிந்த ராஜபக்ஷ ஆகியோரின் புதல்வர்களான சஜித் பிரேமதாசா மற்றும் நாமல் ராஜபக்ஷ ஆகியோர் இந்த விவாதங்களில் சபையில் உரையாற்றவும் இல்லை.

இந்த சட்டமூலம் இவ்வாரம் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும் என்று அறிவிக் கப்பட்டிருக்காத நிலையில் இந்த சட்டமூலம் தொடர்பாக உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பை சபாநாயகர் 2025.09.10 ஆம் திகதி பாராளுமன்றத்தில் அறிவித்திருந்தார். அதன்படி சாதாரண பெரும்பான்மை மூலம் நிறைவேற்ற முடியும் என்று அறிவித்தல் செய்யப்பட்டிருந்தது. அதன்படி

சட்டமூலத்தை அவசரமாக நிறைவேற்ற வேண்டும் என்று பாராளுமன்ற விவகாரங்கள் தொடர்பான நிறைவேற்று குழு கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதால் 10 ஆம் திகதி விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. சட்டமூலம் நிறைவேறியவுடன் அன்று மாலையிலேயே தாமதிக்காமல் சபாநாயகர் டாக்டர் ஜகத் விக்கிரமரத்ன நிறைவேற்றப்பட்ட சட்டமூலத்திற்கு கையொப்பம் இட்டார். அதன்படி சட்டமாகியது.

இந்த சட்டமூலம் நிறைவேற்றப்பட்டு சட்டமாகியதால் முன்னாள் ஜனாதிபதிகளுக்கான வரப்பிரசாதங்கள் அனைத்தும் இல்லாதொழிக்கப்படுகின்றது. ஓய்வூதியம், உத்தியோகபூர்வ வாசஸ்தலம் மற்றும் அவர்களது செயலாளர்களுக்கான சகல விதமான வசதிகள் அனைத்து க்கும் முற்றுப் புள்ளி வைக்கப்பட்டுவிட்டது. ஆனாலும் முன்னாள் ஜனாதிபதிகளது பாதுகாப்பு

தொடர்பாக சட்டத்தில் ஆழமாக எதுவும் இடம்பெற்றிருக்கவில்லை. ஏற்கனவே அந்த பாதுகாப்பு குறைக்கப் பட்டிருக்கின்றது. அதன்படி முன்னாள் ஜனாதிபதிகளான மஹிந்த ராஜபக்ஷ அவர் வசித்து வந்த விஜேராம இல்லத்தில் இருந்து 2025.09.11 ஆம் திகதி நண்பகலில் எல்லா பொருட்களையும் மூட்டை கட்டிக்கொண்டு பி.ப. 4.00 மணியளவில் தங்காலையில் அமைந்துள்ள கால்டன் இல்லத்திற்கு சென்றுவிட்டார். அவ்வாறே சட்டமூலம் நிறைவேற முன்னரே 2025.09.09 ஆம் திகதியே மைத்திரிபால சிரிசேனா அவர் வசித்து வந்த உத்தியோகபூர்வ இல்லத் தில் இருந்து வெளியேறிவிட்டார். எனினும் சந்திரிகா பண்டாரநாயக்கா அவர் வசித்து வந்த இல்லத்திலிருந்து வெளியேற தனக்கு இரண்டு மாத அவகாசம் கோரியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன் கோதாபய ராஜபக்ஷவும் அவர் வசித்து வந்த உத்தியோகபூர்வ இல்லத்தை விட்டு முன்கூட்டியே வெளியேறிவிட்டதாக அறிவிக்கப்பட்டது. ஆனாலும் கோதாபய ராஜபக்ஷ அவருக்கான உத்தியோகபூர்வ இல்லத்தைபயன்படுத்தவில்லை என்றும் வேறு வீட்டிலே வசித்து வந்ததாகவும் தெரிவிக்கப் படுகின்றது. ஏற்கனவே இவ்வாறு தாங்கள் வசித்து வருகின்ற இல்லங்களில் இருந்து வெளிறுங்கள் அல்லது இன்றைய பெருமதிக்கு வாடகை தாருங்கள் என்று அரசாங்கம் அறிவித்தல் செய்திருந்தது. அதன்படி மஹிந்த ராஜபக்ஷ இருந்த விஜேராம வீட்டிற்கு 44 இலட்சம் ரூபா மாதாந்த வாடகை தர வேண்டும் என்று கேட்டகப்பட்டிருந்தது. ஆனால் மஹிந்த ராஜபக்ஷ வும் அவரது ஆதரவா ளர்களும் "முடிந்தால் வெளியேற்றுங்கள். போகவேண்டுமானால் எழுத்துமூலம் அறிவித்தல் தாருங்கள். இல்லாவிட்டால் நாங்கள் பார்த்துக் கொள்கின்றோம்" என்று வீராப்பு பேசி வந்தனர். இன்னும் சிலர் மஹிந்தவுக்கு கொழும்பில் வீடு கொடுப்போம் என்றும் கூறி வந்தனர். ஆனாலும் அந்த வீராப்பு பேச்சுக்கள் வரப்பிரசாதங்களை ஒழிக்கும் சட்டமூலம் நிறைவேற்றப்பட்டு 24 மணித்தியாலங்கள் போக முன்னரே தூசுக்கும் சமமம் இல்லாமல் காற்றில் பரந்துவிட்டன. எங்களுக்கு இனி வேண்டாம் அரச வரப்பிரசாதங்கள் என்று கூறிக்கொண்டே மஹிந்தவும் மூட்டை முடிச்சுகளுடன் தங்காலைக்கு பறந்தார்.

இந்நிலையில் ஏன் இவ்வாறான ஒரு சட்டமூலம் நிறைவேற்றப்பட்டு முன்னாள் ஜனாதிபதிகளின் வரப்பிரசாதங்களை ஒழித்துக் கட்ட வேண்டும், அவர்கள் என்ன அநியாயம் செய்தார்கள்? என்பதே பிரதான வினாவாகும். முன்னாள் ஜனாதிபதிகளான ஆர் பிரேமதாசா உயிரோடு இல்லாததால் ஹேமா பிரேமதாசா ஓய்வூதியம் பெற்று வந்தார். அதேநேரம் ஜே.ஆர். ஜெயவர்தனாவின் பாரியாரும் இல்லை. அடுத்ததாக சந்திரிகா பண்டாரநாயக்கா குமார துங்கா, மைத்திரிபால சிரிசேனா, மஹிந்த ராஜபக்ஷ, கோதாபய ராஜபக்ஷ, ரனில் விக்கிர மசிங்கா ஆகியோரே இவ்வாறு ஓய்வு பெற்ற பின்னரும் உத்தியோகபூர்வமாக ஓய்வூதியம், செயலாளர், பாதுகாப்பு மற்றும் வாசஸ்தலம் என்று அனுபவித்து வந்தனர். இதில் ரனில் விக்கிரமசிங்கா அவரது இல்லத்தில் வசித்து வருவதால் அவருக்கு உத்தியோகபூர்வ இல்லம் இருக்கவில்லை.

இவ்வாறு ஜனாதிபதிகள் ஓய்வு பெற்றுள்ள நிலையில் எந்தவிதமான பிரயோசனமும் எடுக்க முடியாத அடிப்படையில் இவர்களுக்காக ஒரு வருடத்திற்கு அரச நிதி 09 கோடி 85 இலட்சத்து 48 ஆயிரத்து 839 ரூபா செலவிட வேண்டி இருக்கின்றது. குறிப்பாக சந்திரிகா பண்டாரநாயக்காவுக்கு 11,664,348 ரூபா, மஹிந்த ராஜபக்ஷ 54,652,990 ரூபா, மைத்திரிபால சிரிசேனா 15,772,450 ரூபா, கோதாபய ராஜபக்ஷ 10,222,881 ரூபா மற்றும் ரனில் விக்கிரமசிங்கா 3,492,309 ரூபா என்ற அடிப்படையில் வருடாந்தம் அரசாங்கம் செலவு செய்ய வேண்டி ஏற்பட்டிருக்கின்றது. இந்த பணம் அரசுக்கு பாரிய இழப்பாகும். இது மக்களது பணம் என்று அரசாங்கம் கணிப்பீடு செய்ததால் ஓய்வு பெற்ற பின்னர் அவரவர் வீடுகளுக்கு போய்விட்டால் இந்த பணத்தை மீதப்படுத்தலாம் என்று அரசாங்கம் முடிவு செய்திருக்கின்றது. அத்துடன் இந்த தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் பதவிக்கு வர முன்னர் நாட்டில் ஊழல், மோசடிகள், வீன் விரயத்தை ஒழிப்போம் என்று வாக்களித்திருக்கின்றது. வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டிய கடப்பாடும் அரசாங்கத்திற்கு இருக்கி ன்றது. ஏற்கனவே தேசிய மக்கள் சக்தி உறுப்பினர் கொட்ஹச்சி மஹிந்த ராஜபக்ஷவின் உகண்டாவில் இருக்கும் 3000 கோடி ரூபாய்களை நாட்டிற்கு கொண்டு வருவோம் என்று தேர்தல் மேடைகளில் முழங்கம் போட்டு வந்தார் ஆனால் 3000 கோடி ரூபாய்களை கொண்டு வருவது எப்படிப்போனாலும் மஹிந்தவை கொழும்பில் இருந்து தங்கல்லைக்கு விரட்டிவிட்டார்கள் என்றே கூற வேண்டும். இங்கு மஹிந்த ராஜபக்ஷ தங்கி இருந்த விஜேராம உத்தியோகபூர்வ இல்லம் இரண்டு முறை மஹிந்தவின் வேண்டுகோளின் பேரில் புணரமைப்பு செய்யப்பட்டிருக்கின்றது. அவர் ஜனாதிபதியாக இருந்து ஓய்வு பெற்ற பின்னர் உத்ததி யோகபூர் இல்லம் வழங்கப்பட்ட பின்னர் 2019.10.19 ஆம் திகதி சமர்ப்பித்த அமைச்சரவை பத்திரம் மூலம் சுமார் 100 கோடி ரூபா அளவில் செலவு செய்யப்பட்டு திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதன் பின்னர் மீண்டும் கோதாபய காலத்தில் 40 கோடி ரூபா செலவு இருப்பதாக கூறி அமைச்சரவை பத்திரம் சமர்ப்பிக்கப்பட்ட போதும் அப்போதைய ஜனாதிபதியாக இருந்த கோதாபய சற்று இழுத்தடிப்பு செய்து வந்த நிலையில் இரண்டு வருடத்தில் அவர் விரட்டப்பட்டார். அதனோடு மஹிந்தவு பெசில் ஆகியோரும் ஓட வேண்டி ஏற்பட்டது.

எப்படியோ பின்னர் ரனில் ஜனாதிபதியாகியவுடன் மீண்டும் 40 கோடி ரூபாவை பெற்று அந்த வீட்டை திருத்தம் செய்து ஆடம்பர மாளிகையாக மாற்றிக்கொண்டார். இத்தனையும் ஓய்வுபெற்ற ஜனாதிபதி என்ற முறையில் மஹிந்தவும் அவரது பாரியாரான சிரந்தியும் ஓய்வு பெற்ற ஜனாதிபதி என்ற வகையில் தங்குவதற்காகவா என்று பார்த்த போது அவர்களது

குடும்பமே அதில் அவ்வப்போது வந்து வசித்துள்ளனர். சரி எப்படியோ நாட்டிற்காக சேவை செய்தவர்கள், நாட்டின் முதுபெரும் அரசியல்வாதிகள், ஜனாதிபதிகளாக இருந்தவர்கள் என்ற வகையில் அதி உண்ணதமான நிலையில் மதிக்க வேண்டும். அதற்காக ஜே.ஆர்.ஜெயவர்தனவின் அரசியல் அமைப்பின் தயவில் சலுகைகளையும் வரப்பிரசாதங்களையும்

அனுபவித்துவிட்டு போகட்டும் என்று இருந்தால் இவர்கள் ஓய்வு பெற்றவர்களாக சமைத்து சாப்பிட்டு அன்றைய நாளின் தினசரி பத்திரிகைகளை படித்து ஓய்வாக காலத்தை கழித்தார் களா என்று பார்த்தால் அதுதான் இல்லை.

அந்த வாசஸ்தலங்களில் இருந்து கொண்டு அவர்களது அரசியல் கட்சி ஆதரவா ளர்களை அழைத்தல், திட்டங்களை வரைதல், அமுல்படுத்தல், தேசிய மட்ட ஒருங்கிணைப்புக்களை செய்தல், கட்சியின் தேர்தல் கால பிரசார நடவடிக்கை களை மேற்கொள்ளும் மத்திய நிலையங்களாக பயன்படுத்தி வந்துள்ளனர். போதாதற்கு ஜனாதிபதியாக இருந்து ஓய்வு பெற்ற பின்னர் மீண்டும் தேர்தலில் போட்டியிட்டு அடிமட்ட பாராளுமன்ற உறுப்பினர்களாக மஹிந்தவும் மைத்திரிபால சிரிசேனாவும் பாராளுமன்றம் வந்துள்ளனர். இவர்கள் செய்தது மிகவும் மோசமான கீழ்த்தரமான அரசியலாகும். பல்கலைக்கழகத்தில் கலாநிதி பட்டம் பெற்ற பின்னர் மீண்டும் பாலர் வகுப்பில் சேர்ந்து படிப்பது போன்ற வேலையாகும். அந்த வகையில் இவர்களது அரசியல் கட்சியை வளர்க்கவும் இவர்களது அரசியல் செல்வாக்கை வளர்க்கவும் அரச நிதியும் வளங்களுமே பயன்படுத்தப்பட்டு வந்திருக்கின்றது.

இவ்வாறு பார்க்கும் போது இந்த சட்டம் மிகவும் சிறந்த நல்லதொரு சட்டமாகும். அதனால்தான் நாமல் ராஜபக்ஷவோ அல்லது சஜித் பிரேமதாசாவோ சட்டமூல விவாதத்தில் உரையாற்றவில்லை. இந்த சட்டமூலம் நேரடியாக அவர்களது குடும்பத்தையும் பாதிப்பதாக அமைவதால் ஆகும். ஆனாலும் ம.எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சட்டமூலத்திற்கு எதிரான கருத்துக்களை முன்வைத்து பேசினாலும் சட்டமூலத்தை எதிர்த்தும் வாக்களிக்கவில்லை. அவ்வாறு செய்திருந்தால் இந்த அரசாங்கம் அத்தகைய பேச்சுக்களையும் வாக்களித்ததையும் வைத்து இந்த கட்சிகளுக்கு ஓரளவுக்காவது எஞ்சி இருக்கின்ற மக்கள் ஆதரவையும் இல்லாதொழித்துவிடலாம் என்ற அச்சம் இருந்து வருகின்றது. நாம் அரச சொத்து விரயத்தை தடுக்கவும் வீன் விரயத்தை கட்டுப்படுத்தவும் நடவடிக்கை எடுத்த போது எதிர்க்கட்சியில் அங்கம் வகிக்கும் கட்சிகள் அதற்கு எதிரானவர்கள் என்று கூறி அடுத்த தேர்தலில் இந்த அரசு மிக மோசமான பிரச்சாரத்தை முன்னெடுக்கலாம். அதன் காரணமாகவே இவர்கள் வாக்களிப்பு நேரத்தில் சபையில் இருந்து வெளியே றிவிட்டனர்.

எவ்வாறோ இந்த செயலானது மஹிந்தவை பழிவாங்குவதற்காக செய்யப்பட்ட நடவடிக்கை என்றும் தமிழீழ விடுதலைப் புலிகளின் மீள் எழுச்சிக்கு வழிவகுக்கும், டயஸ்போராவின் தேவைக்கு ஏற்ப செய்யப்பட்ட திட்டம் என்றும் மஹிந்த ஆதரவாளர்கள் அரசாங்கத்தை திட்டித் தீர்க்கின்றனர். இந்நிலையில் தேசிய சுதந்திர முன்னணி கட்சியின் தலைவர் விமல் வீருவன்ச உள்ளிட்ட எதிரணி பாராளுமன்ற உறுப்பினர் குழுவொன்று கண்டிக்கு விஜயம் செய்து அஸ்கிரிய, மல்வத்தை பீடாதிபதிகளை சந்தித்து இந்த சட்ட மூலம் மஹிந்தவை பழிவாங்க கொண்டு வரப்பட்ட திட்டமிடப்பட்ட சட்டம் என்று 2025.09.12 ஆம் திகதி விளக்கமளித்தனர்.

ஆனால் தேசிய மக்கள் சக்தி ஆதரவாளர்கள் அநுரகுமார திசாநாயக்கா செயல் வீரர், சொன்னதை செய்து காட்டி சாதித்துவிட்டார் என்று மகிழ்ச்சி ஆரவாரம் செய்துகொண் டிருக்கின்றனர். அத்துடனடன் அநாவசியமாக அனுபவித்து வந்த வரப்பிரசாதங்களை ஒழித்த மைக்கும் இந்த ஜனாதிபதிகளின் பாதுகாப்புக்கும் எந்தவிதமான தொடர்பும் இல்லை என்று அரசாங்கம் திட்டவட்டமான அறிவித்திருக்கின்றது. அதே நேரம் பிரதி பாதுகாப்பு அமைச்சர் அருண ஜயகொடிக்கு எதிராக எதிர்க்கட்சிகள் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்திருந்த நம்பிக்கை இல்லாப் பிரேரணையை 2025.09.10 ஆம் திகதி சபாநாயகர் நிராகரித்திருந்தார். அந்த நம்பிக்கை இல்லாப் பிரேரணை முறையாக சமர்ப்பிக்கப்படவில்லை என்பதோடு அதற்காக முன்வைக்கப்பட்டிருந்த காரணங்கள் வலிதற்றவை என்பதே நிராகரிக்க காரணமாகும்..

# இந்திய நிதியில் கல்முனை மாநகர சபைக்கு புதிய கட்டிடத் தொகுதி

## நிசாம் காரியப்பர் முயற்சி

(அஸ்லம் எஸ். மௌலானா)

கல்முனை மாநகர சபைக்கான புதிய கட்டிடத் தொகுதியை இந்திய அரசாங்கத்தின் நிதியுதவியுடன் அமைப்பதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் செயலாளர் நாயகமும் பாராளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி நிசாம் காரியப்பர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த 2013/2014 காலப்பகுதியில் கல்முனை மாநகர மேயராக தான் பதவி வகித்தபோது, அப்போதைய இந்திய உயர்ஸ்தானிகரை சந்தித்து, 75 வருட காலம் பழைமை வாய்ந்த கல்முனை மாநகர சபைக் கட்டிடத்திற்குப் பதிலாக அனைத்து வசதிகளும் கொண்ட புதிய கட்டிடத் தொகுதியை அமைப்பதற்கான ஒத்துழைப்பைக் கோரியதற்கு அமைவாக இத்திட்டத்திற்கு நிதியுதவி அளிக்க இந்திய அரசாங்கம் முன்வந்திருந்தது. எனினும் அப்போது வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் (ERD) அனுமதி கிடைத்திருக்கவில்லை.

இவ்வாறான பின்னணியில், தற்போதைய இந்திய உயர்ஸ்தானிகரான சந்தோஷ் ஜாவை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் சகிதம் அண்மையில் சந்தித்த போது அவரிடம் இத்திட்ட முன்மொழிவை சமர்ப்பித்தேன்.

இதற்கு வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் அனுமதி பெற்றுத் தரப்பட்டால் குறித்த திட்டத்தை நடைமுறைப் படுத்துவதற்கு இந்திய அரசாங்கம் தயாராக இருப்பதாக உயர்ஸ்தானிகர் உறுதியளித்தார்.



இத்திட்ட முன்மொழிவுக்கு வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் அனுமதியை பெற்றுக் கொள்ள வேண்டுமாயின் முறையே கல்முனை பிரதேச ஒருங்கிணைப்புக் குழுவினதும் அம்பாறை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவினதும் அங்கீகாரம் பெறப்பட வேண்டும் என்ற விதிமுறைக்கு அமைவாக அவற்றின் அங்கீகாரத்தை பெறுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறேன்.

எதிர்வரும் 18 ஆம் திகதி கல்முனை பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் குறித்த திட்ட முன்மொழிவை அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கவிருப்பதாகவும் இவ்விடயத்தை இக்கூட்ட நிகழ்ச்சி நிரலில் சேர்த்துக் கொள்ளுமாறும் கல்முனை பிரதேச ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவரான பாராளுமன்ற உறுப்பினர் ஏ. ஆதம்பாவை கடிதம் மூலம் கேட்டுள்ளேன்,

என தெரிவித்தார்.

# பசறையூர் பாலச்சந்திரனின் "அவளுக்குள் மலர்ந்த நான்" சிறுகதை நூல் வெளியீட்டு விழா!



(வாஹிட் குத்தூஸ்)

மட்டக்களப்பு "மகுடம்" பதிப்பகத்தின் 97 ஆவது வெளியீடான கவிஞர் பசறையூர் பாலச்சந்திரன் வரைந்த "அவளுக்குள் மலர்ந்த நான்!" முதல் சிறுகதை தொகுப்பு நூல் வெளியீட்டு விழா ஊவா மாகாண நூலக சபை கேட்போர் கூடத்தில் "கலாபூசணம்" கோவுஸ்ஸ ராம்ஜீ உலகநாதன் தலைமையில், கலாபூஷணம் சாரணா கையூம் முன்னிலையில், கடந்த சனிக்கிழமை (23) அன்று நடைபெற்றது.

ஊவா மாகாண சுகாதார அமைச்சின் பிரதம செயலாளர் ஜீவந்த ஹேரத் பிரதம அதிதியாக கலந்து சிறப்பித்த இவ் விழா, கவி-தாயினி சைலஜா சந்திரனின் வரவேற்புரையோடு இனிதே ஆரம்பமாகியது.

நூல் ஆய்வுரையை ஓய்வு நிலை அதிபரும், கல்வித்துறை வளவாளருமான பெருமாள் கமலேந்திரன், வெளியீட்டுரையை மகுடம் பதிப்பகம் சார்பில் மணிசேகரம், நன்றியுரையை நூலாசிரியர் பாலா ஆகியோர் நிகழ்த்தினர்.

விழாவில் ஒரு விசேட அம்சமாக ஊவா ஹைலன்ட்ஸ் கலைஞர் விமலநாதன் அபிநயம் சகிதம் "நாட்டாரியல் பாடல்களை சிறப்புற இசைத்தார். பிரதம விருந்தினர் ஜீவந்த ஹேரத், நிர்வாக உத்தியோகத்தர் ருவணி ஆகியோர் சிறப்புரைகளை நிகழ்த்தினர். முதற்பிரதியினை கவிதாயினி புஷ்பாம்பிகை கனேசனின் புதல்வி, பதுளை "குபேரன்ஸ்" நிறுவனத்தின் ராஜினி ஜெகநாத் பெற்றுக்கொண்டார்.

நிகழ்வில் மற்றொரு சிறப்பம்சமாக முன்னாள் அதிபர் கமலேந்திரன், கலை இலக்கிய, ஊடகவியர்களான சாரணாகையூம், ராம்ஜீ உலகநாதன், புஷ்பா கணேசன், காவத்தை பழனியான்டி, கனகராசா, ஷைலஜா சந்திரன், அட்டாம்பிடிய சிவச்சந்திரன், ஹப்புதளை ருக்ஷன், மட்டுநகர் முத்துமணி . வாஹிட் குத்தூஸ், மற்றும் ஊ.மா. சபை ஓய்வு நிலை சாரதி, சிவஞானம் ஆகியோர் நூலாசிரியரினால் பொன்னாடை போர்த்தி பாராட்டி கௌரவிக்கப்பட்டதோடு, சுகாதார அமைச்சின் இருவருக்கு "நினைவுப் பரிசில்களும்" வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.







மீலாத் நபி தினத்தை முன்னிட்டு வரலாற்றுப் பிரசித்தி பெற்ற பைத்துல் முபாரக் வதாருல் முஸ்தபா புகாரித் தக்கியாவுக்கு அருகாமையில் ஐஸ்கிரீம், யோகட் மற்றும் குளிர்பானங்கள் வழங்கும் நிகழ்வு இடம் பெற்றது. இதன் போது பிடிக்கப்பட்ட படங்களை இங்கு காணலாம்.

(படங்கள்: பீ.எம் முக்தார்)

# தர்கா நகர் பொக்கிஷம் என்ற வரலாற்று நூல் கையளிப்பு



(பீ.எம் முக்தார்)

அண்மையில் தர்கா நகருக்கு விஜயம் செய்த ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீமை தர்கா நகர் நஜீம் ஹாஜியார் கல்வி நிலைய ஸ்தாபகர் கலாநிதி அமீர் ஆலிம் சந்தித்து கலந்துரையாடினார். இதன் போது தர்கா நகர் பொக்கிஷம் என்ற வரலாற்று நூலையும் நஜீப் ஹாஜியாரின் வாழ்க்கைச் சரித்திரம் அடங்கிய வாழ்க்கைப் போராட்டம் என்ற நூலையும் கையளித்தார்.

இந்நிகழ்வில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.எம் அஸ்லம் ஹாஜியாரும் பங்குபற்றினார்.



அனுராதபுரம் கோவில்பந்தாவ சபா அக்கடமியின் ஏற்பாட்டில் இயங்கிவரும் அஸ்ஷபா மகளிர் உதவும் கரங்கள் அங்கத்தவர்களினால் கோவில்பந்தாவ மையவாடி வளாகத்திற்கு முன்னாலுள்ள பிரதான வீதியில் வீதி விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளதை படத்தில் காணலாம்.

(படம்:எம்.ரீ.ஆரிப்)

# உடற்கல்வி ஆலோசகருக்கு சேவை நலன் பாராட்டு



(ரஷீத் எம். றியாழ்)

கண்டி கல்வி மாவட்டத்தில் சுமார் 34 ஆண்டுகளாக ஆசிரியராகவும் உடற் கல்வி ஆசிரிய ஆலோசகராகவும் பணியாற்றி ஓய்வு பெற்ற எம். ஆர். எம் ரிஸ்னியை கண்டி கல்வி வலயம் பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு கண்டி கட்டுகஸ் தோட்டை ஸாஹிரா கல்லூரி கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

கண்டி கல்வி வலய கோட்டக் கல்விப் பணிப்பாளர் திரு எஸ் தமிழ்ச்செல்வன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் கண்டி மாவட்டத்தில் பல்வேறு கல்வி வலயங்களில் ஆசிரியராகவும் கண்டி கல்வி வலயத்தில் சுமார் 15 ஆண்டு காலமாக ஆசிரிய ஆலோசகராகவும் கடமையாற்றி 34 ஆண்டுகால சேவையின் ின்னர் ஓய்வு பெறும் எம் ஆர் எம் ரிஸ்னி ஆசிரியர் கௌரவிக்கப்பட்டார்.

கண்டி வலயத்தின் பிரதிக்கல்விப் பணிப்பாளர் ஏ. ஆர். எஃப். அமீன், உதவி கல்வி பணிப்பாளர் எஸ். எஸ். ரமேஷ் பாபு ஆசிரிய ஆலோசகர்கள் வளவாளர்கள் பலரும் இங்கு சேவை நலன் பாராட்டுரைகளை நிகழ்த்தினர்

சாஹிரா கல்லூரியின் அதிபர் சட்டத்தரணி பைசால் முஹம்மத் உட்பட கண்டி கல்வி திணைக்களத்தின் ஆசிரிய ஆலோசர்கள் வளவாளர்கள் பலரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்



எஸ்.ஏ. சுஃப்யான்
(Senior Journalist, Chennai - Tamilnadu, India)

# கத்தார் மீது இஸ்ரேல் தாக்குதல்

செப்டம்பர் 9 அன்று கத்தாரின் தலைநகர் தோஹாவில் இஸ்ரேல் நடத்திய வான்வழி தாக்குதலில், அமெரிக்காவின் பங்கு இருந்ததாக அரபு மற்றும் பிராந்திய ஊடகங்கள் கூறுகின்றன. இந்த தாக்குதல், உயர்நிலை ஹமாஸ் பேச்சுவார்த்தை குழுவை குறிவைத்து நடத்தப்பட்டதாக கூறப்படுகிறது.

சௌதி அல் அரேபியா டிவியின் செய்தித் தொகுப்பில், இஸ்ரேல் ஊடகங்களில் வந்த செய்தியை மேற்கோள் காட்டி, தாக்குதல் குறித்து அமெரிக்காவுக்கு முன்கூட்டியே தெரிவிக்கப்பட்டதாகவும், அதிபர் டிரம்ப் அதற்கு ”பச்சைக்கொடி காட்டினார்” என்றும் ஒரு அதிகாரி கூறியதைத் தெரிவித்தது.

மேலும், பெயர் வெளியிட விரும்பாத ஹமாஸ் தலைவர் ஒருவரின் கூற்றைச் சுட்டிக்காட்டிய அந்த தொலைக்காட்சி, தாக்குதல் தோல்வியடைந்தது, பேச்சுவார்த்தை குழுவினர் உயிர் பிழைத்தனர் என்றும் தெரிவித்தது.

கத்தாரின் தலைநகரான தோஹாவில் ஹமாஸ் தலைமை மீது இஸ்ரேல் நடத்திய தாக்குதலால், பிராந்தியத்தில் மோசமான அளவில் மோதல் அதிகரிக்கும் என வல்லுநர்கள் தெரிவித்தனர். நிலைமை மேலும் சிக்கலான ஒரு தளத்தை அமைந்துள்ளதை நாம் புரிந்து கொள்ள கூடியதாக இருக்கிறது. இந்தத் தாக்குதல், காஸா போர்நிறுத்த முயற்சிகளை பின்னுக்குத் தள்ளி மத்திய கிழக்கில் அமெரிக்காவின் கூட்டணிகள் பற்றி நீண்ட காலமாக இருந்து வந்த அனுமானத்தை அசைத்துப் பார்த்திருக்கிறது. அதாவது பெஞ்சமின் நிதான்யாகு மீண்டும் தான் எப்போதும் சமாதானத்தை விரும்பவில்லை என்பதை தெளிவாக தெரியப்படுத்தி உள்ளதை உலகம் தற்போது முழுமையாக அறிந்து கொள்ள முடிகிறது என்பதே நிதர்சனமான உண்மையாகும்.ஹமாஸ் பேச்சுவார்த்தை குழு முகாமிட்டிருக்கும் கத்தாரின் மத்திய தோஹாவில் உள்ள வளாகம் மீது நடத்திய வான் தாக்குதலை ”துல்லியமானது” என இஸ்ரேல் விவரித்துள்ளது.

அல் அரேபியா, தொடர்ச்சியாக வெளியிட்ட முக்கிய செய்திகளில், இந்த தாக்குதல் குறித்து சௌதி அரேபியா தெரிவித்த கண்டனத்தையும் பதிவு செய்தது.

”கத்தார் எத்தகைய நடவடிக்கை எடுத்தாலும் அதனை ஆதரிக்க எங்களின் திறன் அனைத்தையும் வழங்குவோம். இஸ்ரேலின் நடவடிக்கைகளுக்கு கடுமையான விளைவுகள் ஏற்படும் என சௌதி அரசு எச்சரித்ததாகவும் அந்த தொலைக்காட்சி கூறியது.

இந்த தாக்குதல் அதற்கு முந்தைய நாள் ஆறு பேர் உயிரிழந்த ஜெருசலேம் துப்பாக்கிச் சூடு மற்றும் 2023-ஆம் ஆண்டு இஸ்ரேல் மீது ஹமாஸ் நடத்திய தாக்குதலுக்கு பழி தீர்த்துக்கொள்வதற்காக மேற்கொள்ளப்பட்டது என இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு கூறினார்.

வாய்ப்புகளைப் பாதுகாக்கும் பொருட்டு, கத்தாரில் உள்ள ஹமாஸ் தலைவர்களை இலக்காக வைப்பதை இஸ்ரேல் தவிர்த்து வந்தது என்ற புரிதல் இருந்தது. ஆனால், அதை இப்போது கைவிட்டு, ராணுவ மற்றும் அரசியல் வாய்ப்பாகக் கருதி செயல்படுகிறது என்று முனைவர் வக்கீல் கூறுகிறார்.

”உளவுத்துறை மற்றும் ராணுவத்திறன் தயாராக இருக்கிறது. மேலும், அரசியல் ரீதியாக இதைச் செய்ய இது ஒரு முக்கியமான நேரமாகத் தெரிகிறது... ஹமாஸை அழிப்பதோடு மட்டுமல்ல, மத்திய கிழக்கில் இரான் ஆதரவு பெறும் பல்வேறு குழுக்களையும் அதிகமாக ஒழிப்பதே அதன் நோக்கம்.”

”இஸ்ரேல் இப்போது அதிக ஆக்ரோஷமாக மட்டும் இல்லாமல், அதிகமாக சீர்குலைக்கும் விதத்தில் நடந்து கொண்டிருக்கிறது என்ற எண்ணத்தைக் குறித்து அரபு அதிகாரிகள் அதிக அக்கறை காட்டுகின்றனர். அமெரிக்கா அல்லது ஐரோப்பா அதனை அடக்குவதில் மிகக் குறைந்த பங்கு மட்டுமே வகிக்கின்றது,” .ஒரு புதிய உலகில் இருக்கிறோம். பழைய நம்பிக்கைகள் அனைத்தும் உடைந்து சிதறி வருகின்றன” என்பதே பலரின் கருத்தாக உள்ளது.

இறுதியில், செவ்வாய்க்கிழமை நடந்த அதிர்ச்சியூட்டும் நிகழ்வுகளின் பாதிப்பு, வெகுதொலைவுக்கு செல்லும் என்று இரு ஆய்வாளர்களும் வலியுறுத்துகின்றனர்.

இறுதியில், ”இப்போது நடந்து கொண்டிருக்கும் நிகழ்வுகளால் அதிக பாதிப்புக்கு உள்ளாவது இஸ்ரேலியர்களோ அல்லது பாலத்தீனியர்களோ அல்லது அந்தப் பிராந்தியமோ மட்டும் இல்லை. மேற்கு நாடுகள் மீதான நம்பகத்தன்மையே ” என்று குறிப்பிடுகிறார்கள் பலர்.

இந்த தாக்குதல் இஸ்ரேலின் தவறான மதிப்பீடு மற்றும் உளவுத்துறை தோல்வியைக் காட்டுகிறது அல்லது பேச்சுவார்த்தை குழுவினருக்கு உளவியல் அழுத்தம் கொடுத்து பயத்தை ஏற்படுத்தி, அவர்களை சமரசம் செய்யத் தள்ளும் நோக்கத்துடன் நடத்தப்பட்டாக தெரிகிறது.

அல் அரேபியா, தொடர்ச்சியாக வெளியிட்ட முக்கிய செய்திகளில், இந்த தாக்குதல் குறித்து சௌதி அரேபியா தெரிவித்த கண்டனத்தையும் பதிவு செய்தது.. ”கத்தார் எத்தகைய நடவடிக்கை எடுத்தாலும் அதனை ஆதரிக்க எங்களின் திறன் அனைத்தையும் வழங்குவோம். இஸ்ரேலின் நடவடிக்கைகளுக்கு கடுமையான விளைவுகள் ஏற்படும் என சௌதி அரசு எச்சரித்ததாகவும் அந்த தொலைக்காட்சி கூறியது.

கத்தார் தலைநகர் தோஹாவில் ஹமாஸ் அமைப்பின் பேச்சுவார்த்தை குழுவை குறிவைத்து இஸ்ரேல் நடத்திய தாக்குதலுக்குப் பல இஸ்லாமிய நாடுகள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளன.

ஹமாஸ் அமைப்பு, தங்களின் பேச்சுவார்த்தைக் குழுவைக் கொல்வதற்கான முயற்சி தோல்வியடைந்ததாகக் கூறியுள்ளது. இருப்பினும், இந்தத் தாக்குதலில் அமைப்பை சேர்ந்த ஆறு பேர் உயிரிழந்ததாக ஹமாஸ் தெரிவித்துள்ளது.

அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப், தனது “ட்ரூத் சோஷியல்“ தளத்தில் இந்தத் தாக்குதல் குறித்து ”அதிருப்தி” தெரிவித்தார்.

இது அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் ஆகிய இரு நாடுகளின் நோக்கங்களை நிறைவேற்றவில்லை என்றும் அவர் கூறினார்.

அதே நேரம் தாக்குதலுக்கு முன்பே அமெரிக்கா மற்றும் கத்தாருக்குத் தகவல் அளித்ததாக இஸ்ரேல் கூறியுள்ளது.

கத்தார் வெளியுறவுத் துறை அமைச்சகம், இஸ்ரேலின் இந்தத் தாக்குதல் சர்வதேச சட்டங்களை மீறிய கடுமையான செயல் என்றும், இது ஒரு ”கோழைத்தனமான செயல்” என்றும் கண்டனம் தெரிவித்துள்ளது.

கத்தார் பிரதமர் வெளியிட்ட அறிக்கையில், ”இஸ்ரேலின் தாக்குதலுக்குப் பதிலடி கொடுக்க கத்தாருக்கு முழு உரிமை உண்டு. மேலும், அதன் பாதுகாப்பு மற்றும் பிராந்திய ஸ்திரத்தன்மைக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தும் எந்தவொரு பொறுப்பற்ற செயலையும் அல்லது தாக்குதலையும் எதிர்த்து கடுமையான நடவடிக்கை எடுக்கும்” என்று குறிப்பிட்டுள்ளார்.

இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவை சர்வதேச சட்டங்களை மீறியதற்காகப் பொறுப்பேற்கச் செய்யும் பணியை சட்ட வல்லுநர்கள் குழுவிடம் கத்தார் அரசு ஒப்படைத்திருப்பதாக கத்தார் அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்த தாக்குதலுக்கு அரபு நாடுகளின் அரசாங்கங்கள் கடுமையான எதிர்வினைகளை வெளிப்படுத்தியுள்ளன.

மேலும் இந்தத் தாக்குதல் ஒரு ”புதிய உச்சத்தைத் தாண்டியுள்ளது” என்று இந்த நாடுகளின் ஊடகங்கள் குறிப்பிட்டுள்ளன.

இந்தத் தாக்குதலுக்கு அமெரிக்க அதிபர் டிரம்ப்தான் காரணம் என சில ஊடக செய்திகள் கூறுகின்றன.

இருப்பினும், தாக்குதல் குறித்துத் தனக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது என்றும், தனது சிறப்புத் தூதர் கத்தாருக்குத் தகவல் தெரிவித்ததாகவும், ஆனால் அதற்கு முன்பே ”மிகத் தாமதமாகி விட்டது” என்றும் டிரம்ப் கூறியுள்ளார்.

மறுபுறமோ ஐ.நாவுக்கான இஸ்ரேலின் தூ தர், இஸ்ரேல் எப்போதும் அமெரிக்காவின் நலன்களுக்கு ஏற்றவாறு செயல்படாது என்று கூறினார் .

இஸ்ரேலிய தாக்குதல் சர்வதேச சட்டங்களின் கடுமையான மீறல் என கத்தார் வெளியுறவுத் துறை அமைச்சகம் கண்டனம் தெரிவித்துள்ளது.

கடந்த ஆண்டு ஹமாஸ் அரசியல் பிரிவின் தலைவர் இஸ்மாயில் ஹனியே தெஹ்ரானில் இஸ்ரேலால் கொல்லப்பட்டார். அத்தகைய தாக்குதலை எதிர்கொண்ட இரான் இந்தத் தாக்குதலுக்கு முதல் எதிர்வினையை ஆற்றியது.

இந்தச் சமீபத்திய நிகழ்வு ”பிராந்திய மற்றும் சர்வதேச சமூகத்திற்கு ஒரு கடுமையான எச்சரிக்கை” என்று இரான் தெரிவித்துள்ளது.

ஜோர்டான் வெளியுறவுத் துறை அமைச்சகம் இதனை ”ஆபத்தான மற்றும் ஏற்றுக்கொள்ள முடியாத ஆத்திரமூட்டும் செயல்” என்று விவரித்துள்ளது.

சௌதி அரேபியாவின் வெளியுறவுத் துறை அமைச்சகம், சர்வதேச சட்டங்களை ”மீண்டும் மீண்டும் மீறியதற்காக” இஸ்ரேல் ”கடுமையான விளைவுகளை” சந்திக்க நேரிடும் என்று எச்சரித்தது.

ஐக்கிய அரபு எமிரேட்ஸின் வெளியுறவுத் துறை அமைச்சர் ஷேக் அப்துல்லா பின் சயீத், இந்தத் தாக்குதலை ”கோழைத்தனமானது” மற்றும் ”பொறுப்பற்ற ஆத்திரமூட்டல்” என்று கண்டித்தார்.

இது பிராந்திய மற்றும் உலகளாவிய ஸ்திரத்தன்மையைப் பலவீனப்படுத்துகிறது என்றும் அவர் கூறினார்.

எகிப்து இந்தத் தாக்குதலை ”ஆபத்தான முன்னுதாரணம்” என்று குறிப்பிட்டது. காஸாவில் போர் நிறுத்தப் பேச்சுவார்த்தைகளுக்கு கத்தார் தலைமையேற்றிருக்கும் நேரத்தில், இது கத்தாரின் இறையாண்மையின் மீதான நேரடித் தாக்குதல் என்றும் கூறியது.

எகிப்து அதிபர் அலுவலகத்தின் அறிக்கையில், இந்தத் தாக்குதல் மத்தியஸ்த முயற்சிகளைப் பலவீனப்படுத்துவதாகவும், பரந்த ஸ்திரமின்மையை ஊக்குவிப்பதாகவும் கூறியுள்ளது.

ஜோர்டான் டிவியின் கூற்றுப்படி, இந்த ”ஆபத்தான ஆத்திரமூட்டலை” நிறுத்தி, சர்வதேச சட்டங்களைப் பின்பற்ற இஸ்ரேலை கட்டாயப்படுத்த சர்வதேச சமூகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஜோர்டான் அரசு கோரியுள்ளது.

ஓமன் வெளியிட்ட அறிக்கையில், இது ”அரசியல் படுகொலை” மற்றும் ”நாட்டின் இறையாண்மையின் கடுமையான மீறல்” என்று கூறியுள்ளது.

இராக் வெளியுறவுத் துறை அமைச்சகம் இதனை ”கோழைத்தனமான செயல்” மற்றும் கத்தார் பாதுகாப்புக்கு ”கடுமையான அச்சுறுத்தல்” என்று கூறியுள்ளது.

லெபனான் அதிபர், ”அனைத்து சர்வதேச சட்டங்கள் மற்றும் ஒப்பந்தங்களையும் மீறும்” இஸ்ரேலின் இத்தகைய நடவடிக்கைகளைத் தடுக்க சர்வதேச சமூகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தார்.

அல்ஜீரிய வெளியுறவுத் துறை அமைச்சகம் ஃபேஸ்புக்கில் வெளியிட்ட அறிக்கையில், இது இஸ்ரேல் ”அமைதியை விரும்பவில்லை” என்பதை நிரூபிக்கிறது என்று கூறியது.

பாலத்தீன அதிகார சபையின் தலைவர் மஹ்மூத் அப்பாஸ் இந்தத் தாக்குதலைக் கண்டித்து, அதனை ”கடுமையான ஆத்திரமூட்டல்” என்று விவரித்தார். பாலத்தீன பிரச்னைக்கு ஒரு நியாயமான தீர்வு காண வேண்டும் என்ற தனது கோரிக்கையை அவர் மீண்டும் வலியுறுத்தினார்.

இரான் ஆதரவு பெற்ற ஹூத்தி இயக்கத்தின் அல்-மசிரா டிவி சேனல் தனது இணையதளத்தில் வெளியிட்ட செய்தியில், ஆரம்பத் தகவல்களின்படி இந்தத் தாக்குதல் அமெரிக்காவுடன் ஒருங்கிணைந்து நடத்தப்பட்டதாக கூறியது.

இதற்கிடையில், அந்த தொலைக்காட்சி நிகழ்ச்சியில் கலந்துக்கொண்ட ஒரு நிபுணர், அரபு நாடுகளின் பங்கைப் பற்றி பேசினார்.

”ஜூன் மாதத்தில் அமெரிக்காவின் அல்-உதீத் ராணுவத் தளத்தை குறிவைத்த இரானிய ராக்கெட்டுகளைத் தடுத்த அரபு பாதுகாப்பு அமைப்புகள் இப்போது எங்கே?” என்று கேள்வி எழுப்பினார் அவர்

மேலும், அரபு நாடுகள் வெளியிடும் அறிக்கைகளைச் சுட்டிக்காட்டி, ””நாங்கள் கண்டிக்கிறோம். நாங்கள் கோருகிறோம்“ போன்ற வார்த்தைகளே அதிகம் உள்ளது” என்றார் அவர்.

ஹூத்தி உச்ச அரசியல் கவுன்சில் (ஸ்ரீஊ) தலைவர் மஹ்தி அல்-மஷாத், ”குற்றவாளி டிரம்பின் அனுமதி இல்லாமல் இந்தத் தாக்குதல்கள் நடந்திருக்காது” என்று கூறி, அமெரிக்கா உடந்தையாக இருப்பதாகவும் குற்றம் சாட்டினார்.

ஹூத்தி கட்டுப்பாட்டில் உள்ள சபா செய்தி நிறுவனத்திற்கு அவர் அளித்த பேட்டியில், ”சியோனிச எதிரி (இஸ்ரேல்) இருக்கும் வரை பிராந்தியத்தில் அமைதியோ, நிலைத்தன்மையோ இருக்க முடியாது என்பதை இந்தச் சம்பவம் எந்த சந்தேகமும் இல்லாமல் நிரூபித்துள்ளது” என்றும் அவர் தெரிவித்தார்.

மேலும், இது அனைத்து அரபு மற்றும் இஸ்லாமிய நாடுகளுக்கும் ஒரு எச்சரிக்கையாக இருக்கிறது என்றும், ”தாமதமாகிவிடும் முன் எச்சரிக்கையாக இருங்கள். சியோனிச அச்சுறுத்தலை எதிர்கொள்ள நாம் ஒன்றுபடாவிட்டால், தோஹாவில் நடந்தது மற்ற நாடுகளிலும் மீண்டும் மீண்டும் நடக்கும்” என்றும் மஷாத் எச்சரித்தார்.

தொடர்ந்து பேசிய அவர், ”இஸ்லாமியர்களே, அமெரிக்காவை நம்பாதீர்கள். அது சியோனிசத்தின் ஆதரவாளரும், பணியாளரும் ஆகும்““ என்ற கருத்தை அவர் வலிமையாக எடுத்துரைத்தார்.

இதற்கிடையில் ஹமாஸ் இயக்கத்தின் சுவடுகள் எங்கெல்லாம் இருக்கிறதோ அங்கெல்லாம் நாங்கள் தொடர்ந்து தாக்குதல் நடத்த போவதாக இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நிதான்யாகு அறிவிப்பு செய்து இருப்பது மத்திய கிழக்கு நாடுகள் மத்தியில் மிகப் பெரிய அளவில் ஆன பரபரப்பான சூழலை உருவாக்கியுள்ளது குறிப்பிடத்தக்கது.

நாங்கள் யாருக்கும் அச்சப்பட போவதில்லை என்று அவர் அறிவிப்பு செய்துள்ளது தவிர்த்து மீண்டும் தேவைப்பட்டால் கத்தரை தாக்குவோம் என்று உறுதி பட இஸ்ரேல் கருத்து தெரிவித்த நிலையில் சர்வதேச நாடுகள் மத்தியில் மிகப் பெரிய அளவில் கருத்து பரிமாற்றம் நடந்து வருகிறது.

தற்போதைய நிலையில் அரபுகள் முழுமையாக முடிவெடுக்க வேண்டிய காலகட்டம் என்பதை நாம் மறுக்க முடியாது. இதற்கிடையில் இஸ்ரேலிய ராணுவம் தலைமை தளபதி ஈயல் சமீர் தனது தனது பேட்டியில் தனது ராணுவம் அடுத்த கட்டத்தை எட்டியுள்ளது என்றும் உலகின் எந்த பகுதியில் இருந்தாலும் எங்கள் எதிரிகளை வேட்டையாடுவோம் என்று அவர் கூறியுள்ளார்.

கத்தார் மற்றும் சவூதி அரேபியா போன்ற நாடுகளில் அமெரிக்காவின் ராணுவ தளம் செயல்படும் நிலையில் அமெரிக்காவின் ஒத்துழைப்பு மற்றும் சம்பந்தம் இல்லாமல் எந்தவொரு நிலையிலும் தாக்குதலை இஸ்ரேலிய ராணுவம் நடத்த சாத்தியக்கூறு இல்லவே இல்லை என்பதே சவூதி அரேபியா அல் அரேபியா ஊடகம் தெரிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

இதற்கிடையில் கத்தார் அதிபர் அப்துர் ரஹ்மான் அல் தானி தமது நாட்டிற்கு இஸ்ரேல் நாட்டின் மீது தாக்குதல் நடத்த எல்லா நிலைகளிலும் உரிமை உண்டு என்பதை தெளிவாக தெரிவித்து உள்ள நிலையில் அரபு கூட்டு படைகள் இணைந்து தான் தாக்குதலை நடத்த வேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# முஸ்லிம் அரசியலில் தன்னை ஆழப் பதித்த அன்வர் இஸ்மாயில்!



எம்.சி. அன்சார்

முஸ்லிம்களின் அரசியலை ஒரு புதிய பாதையில் நகர்த்துவதற்கு திடசங்கற்பம் பூண்டிருந்த அரசியல்வாதியாகவும், இலங்கை முஸ்லிம் அரசியல்வாதிகளுள் இளையவராக இருந்த போதும் அதிக கவனத்தைப் பெற்றவராகவும் திகழ்ந்தவர்தான் சட்டத்தரணியும், நீர்ப்பாசனத்துறை முன்னாள் அமைச்சர் மர்/ஹும் அன்வர் இஸ்மாயில் எம்மை விட்டுப்பிரிந்து நேற்றுடன் பதினெட்டு வருடங்கள் கடந்து விட்டன. அன்னாரின் 18வது நினைவு தினமாகும். (14.09.2025)

1967ஆம் ஆண்டு ஜுலை மாதம் 16 இல் பிறந்த அன்வர் இஸ்மாயில் தனது ஆளுமையாலும், தன்னம்பிக்கையாலும் சவால்களை எதிர்கொள்ளும் அசகாயத் துணிச்சலாலும் அரசியல் வரலாற்றில் மிகக் குறுகிய காலம் ஆட்சி செலுத்தினாலும் ஒரு நீண்ட வரலாறும் பாரிய பணிகளும் அன்வர் இஸ்மாயிலின் பின்னாலே இருந்தன.

முஸ்லிம் அரசியலிலும் அவர் பிறந்த மண்ணான சம்மாந்துறை அரசியலிலும் அவர் எழுப்பிய அதிர்வுகள் இன்று வரையும் வெற்றோசை போல் கேட்டுக்கொண்டிருக்கின்றன. அவரது இடைவெளி நிரப்பப்பட முடியாத ஒன்றாகவுள்ளது..

1956இல் தனிச் சிங்களச் சட்டம் கொண்டுவரப்பட்ட போது நாடெங்கும் தமிழரசுக் கட்சியினால் பல்வேறு எதிர்ப்புப் போராட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. அந்தப் போராட்டங்களில் கலந்து கொண்டபோது கல்லெறிகள் வாங்கிய இஸ்மாயில் என்ற தந்தையின் மகன் தான் அன்வர் இஸ்மாயில். சிறிய வயதில் இருந்து சமூகப் பணிகளில் அக்கறை செலுத்தி அரசியல் மேடைகளில் பங்குபற்றி ஆர்வத்துடன் இயங்கியவர்.

சிறுவயதிலேயே தந்தையை இழந்த அன்வர் இஸ்மாயில் எப்போதுமே தீவிரமான போக்குள்ளவர். மாணவர் பருவத்திலிருந்து துடுக்குத்தனமான தலைமைத்துவமும் சமூக சேவை ஈடுபாடும் அதனைத் தொடர்ந்ததான சுதந்திரக் கட்சி மேடைப் பேச்சுக்களும் அவரது அரசியல் ஆளுமைக்கு களம் அமைத்தன.

இலங்கையில் இஸ்ரேலியத் தூதரகம் திறப்பதற்கான முஸ்தீபுகள் இடம்பெற்ற போது அதற்கு எதிராக செயற்பட்டதனால் அரசினால் கைது செய்யப்பட்டவர். அக்காலத்து இளைஞர்கள் பலரை தமிழர் விடுதலை இயக்கங்கள் கவர்ந்திருந்தன. முஸ்லிம் இளைஞர்கள் பலர் அதில் அள்ளுண்டு போகக் கூடிய சூழ்நிலை இருந்தது.

சில இளைஞர்கள் தமிழர் இயக்கங்களில் செயற்பட்டுக் கொண்டிருந்தனர். இக்காலத்தில் முஸ்லிம் காங்கிரஸ் என்ற முகாம் அவர்களில் பலரை மீட்டெடுத்தது. முஸ்லிம் காங்கிரஸின் உருவாக்கத்தில் இந்தப் பின்னணியும் இருந்தது.

1980 காலகட்டங்களில் இளைஞர்கள் பலரை தமிழர் விடுதலை இயக்கங்கள் கவர்ந்திருந்தன.. முஸ்லிம் இளைஞர்களும் அதில் அள்ளுண்டு போகக் கூடிய சூழ்நிலை இருந்தன. சில இளைஞர்கள் தமிழர் இயக்கங்களில் செயற்பட்டுக் கொண்டிருந்தனர். இக்காலத்தில்தான் முஸ்லிம் காங்கிரஸ் என்ற முகாம் அவர்கள் பலரை மீட்டெடுத்தது. ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் உருவாக்கத்தில் இந்த பின்னணியும் இருந்தது. இக்கட்சியின் போராளியாகவும் தன்னை இணைத்துக் கொண்டார்

1990களில் மறைந்த தலைவர் அஷ்ரப் பிரகடனப்படுத்திய ‘கறுப்பு வெள்ளி’ப் போராட்டதில் அன்வர் இஸ்மாயில் முக்கிய பங்கெடுத்தார். அரசியல் ரீதியாக பல்வேறு போராட்டங்களில் பங்கெடுத்த அவர், இளைஞர்கள் மத்தியில் கவர்ச்சிகரமான பாத்திரமானார்.

நிறைந்த பேச்சாற்றல், வசீகரம், தைரியம்,மக்களின் மனதினை ஆளுதல், அறிதல், சந்தர்ப்பத்தினை நன்றாக சரிவரப் பயன்படுத்துதல், அரசியலில் மேலிடத்தில் சாதிக்கக் கூடிய மதிநுட்பம், பரந்த அரசியல் அனுபவம், விரைவில் புரிந்து கொள்ளுதல், சரியான நேரத்தில் சரியான முடிவு, புண் சிரிப்பு போன்ற குணங்களினால் தனக்கென்று ஒரு பிரத்தியோக ஆதரவாளர்களை கொண்ட வட்டத்தினை உருவாக்கி ஒரு அரசியல் தலைவனாக மிளிந்தார்.

தனது ஆளுமையாலும், தன்னம்பிக்கையாலும் சவால்களை எதிர்கொள்ளும் அசகாயத் துணிச்சலாலும் அரசியலில் தனது வரலாற்று இருப்பை மேம்படுத்திக் கொண்டார்.

மக்களின் கவர்ச்சி அவருக்கு மக்களின் பிரதிநிதியாக ஆகும் சந்தர்ப்பத்தினைக் கொடுத்தது. 2001இல் திகாமடுல்ல மாவட்ட சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினராக அவர் தெரிவு செய்யப்பட்டார். இக்காலத்தில் அரசியல் ரீதியான முக்கிய தீர்மானங்களை அவர் மேற்கொண்டார்.

தான் பிறந்த மண்ணில் அபிவிருத்திப் பணிகள் இடம்பெற வேண்டும். அழகுற இருக்க வேண்டும். என இரவு, பகலாக அலைந்து திரிந்த காலங்கள் அதிகமாகும். தன்னைச் துஷித்தவர்களை கண்டு கொள்ளவில்லை. தான் கொண்ட பணியை சிறப்பாக செய்ய வேண்டும். என்று மட்டுமே செயற்பட்டார்.

பாராளுமன்றத்திற்கு எப்போதும் செல்லும் போது கோவைகட்டொன்றுடன் செல்லார். மக்களின் பிரச்சினைக்குரிய சம்பந்தப்பட்ட அமைச்சர்களின் சென்று தீர்வுகளைக் காண்பதற்கு இவர் பின்நிற்க மாட்டார்.



ஆட்சியாளர்களுக்கு சிம்ம சொப்பனமாக திகழ்ந்தவர், 2004இல் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசின் முக்கிய பங்காளராக அவர் மாறினார். அக்கூட்டமைப்பின் கிழக்கு உட்கட்டமைப்புப் பிரதி அமைச்சராகப் பதவியேற்ற அவர் பின்னர் தேசிய பட்டியலில் நியமிக்கப்பட்டு நீர்ப்பாசன அமைச்சராகக் கடமையாற்றினார். இவற்றுக்குப் பின்னால் அவரது அரசியல் சாணக்கியம் அதிகம் நிறைந்திருந்தது.

நீர்ப்பாசனத்துறை அமைச்சராக திகழ்ந்தபோது அன்வர் இஸ்மாயில் தேசிய ரீதியாகப் பல சாதனைகளைப் புரிந்தார். அவற்றில் ஹம்பாந்தோட்டை வெஹெரகல நீர்ப்பாசனத் திட்டம், புத்தளம் தெதுறு ஓயா நீர்ப்பாகனத் திட்டம், மஹாஓயா ரம்புக்கள் ஓயா நீர்ப்பாசனத் திட்டம் மற்றும் வேலி ஓயா நீர்ப்பாசனத் திட்டம் போன்ற பாரிய நீர்ப்பாசனத் திட்டங்களை செயற்படுத்த துணித்தார்.

முன்னாள் ஜனாதிபதிகளான சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க, மஹிந்த ராஜபக்ஷ மற்றும் மறைந்த ஜெயராஜ் பெர்னாண்டோ பிள்ளே, மங்கள சமரவீர முதலான அரசியல் தலைவர்களுடன் அவருக்கு மிக நெருக்கமான பழக்கம் இருந்தது. அவர்களது அரசியல் சிந்தனைகளாலும் அவர் அதிகம் ஈர்க்கப்பட்டிருந்தார்.

தனது மக்களையும், தான் பிறந்த மண்ணையும் நேசிப்பதிலே அன்வர் இஸ்மாயில் முதன்மை வாய்ந்தவர்.

தனது ஊரின் அபிவிருத்திக்காக எத்தனை படிகளையும் ஏறி இறங்கத்தயங்காதவர். தன்னைச் தூ சித்தவர்களை கண்டு கொள்ளவில்லை. தான் கொண்ட பணியை சிறப்பாக செய்ய வேண்டும் என்று மட்டுமே செயற்பட்டவர்.

சம்மாந்துறை பிரதேசமே அன்வர் இஸ்மாயிலின் கனவாக இருந்தது. அந்த ஊரின் எதிர்காலம் குறித்து அவர் மிகுந்த அக்கறைப்பட்டிருந்தார். இங்குள்ள அரிய வளங்களை ஆற்றலுடன் பயன்படுத்த அவர் விரும்பியிருந்தார். அந்த ஊரினை திட்டமிடவும் செயற்படுத்தவும் அவர் நம்பிக்கை கொண்டிருந்தார்.

அபிவிருத்தி ஊடாக இன்றும் எங்களுக்குள் உயிர் வாழ்ந்து கொண்டிருக்கின்ற அன்வர் இஸ்மாயில் வெறும் சம்மாந்துறைப் பிரதேசத்திற்கோ அல்லது கிழக்கு மாகாணத்திற்கோ உரித்தான ஒரு அரசியல் தலைவராக மிளிரவில்லை. அவர் தேசிய பார்வையுடன் கூடிய அரசியலை செய்த தலைவராக நோக்கப்பட்டார். எதிர்கால சந்ததினரைக் கருத்திற் கொண்டு தூரநோக்கோடு சிந்தித்து செயற்பட்டவர்.

தலைவர் அஷ்ரஃபின் பாசறையில் வளர்ந்த அன்வர் இஸ்மாயில் ஒரு சட்டத்தரணியாக, முஸ்லிம் சமூகத்தின் விடிவுக்காக போராடும் பாராளுமன்ற உறுப்பினராக, பிரதியமைச்சராக, அமைச்சராக குறுகிய காலம் பணியாற்றினார். சம்மாந்துறை வரலாற்றில் மட்டுமன்றி முஸ்லிம்களின் அரசியல் வரலாற்றிலும் அவர் மறக்க முடியாத ஆளுமை.

இவ்வாறு 40 வருடங்கள் வாழ்ந்த அன்வர் இஸ்மாயில் சம்மாந்துறையின் அரசியலிலும், முஸ்லிம் அரசியலிலும், தேசிய அரசியலிலும் ஆளுமை பதித்த பணிகள் போல் இன்னும் சாதிக்க பலரை முஸ்லிம் சமூகம் எதிர்பார்க்க வேண்டியுள்ளது. மறைந்தாலும் அவர் பற்றிய நினைவுகள் என்றும் முஸ்லிம் தேசத்தின் இதயங்களில் வீற்றிருக்கும்.

அவர் செய்த பாவங்களை மன்னித்து அவர் செய்த நன்மைகளை ஏற்று “ஜன்னதுல் பிர்தௌஸ்” எனும் சுவனத்தை அளிக்க எல்லாம் வல்ல அல்லாஹ்விடம் இந்நாளில் பிரார்த்திப்போம்.

## வாசிப்பிரகை! 33



பிஸ்தாமி அஹமத்

# வாசிப்பும் மனித வாழ்வும்

வசிப்பு மனித வாழ்வோடு மிக நெருக்கமான தொடர்பை கொண்டிருக்கிறது. எந்தளவு தூரம் வாசிக்கின்றோமோ அந்தளவு தூ ரம் நாம் வாழ்கின்றோம் என்பதுதான் அர்த்தம். வாசித்து உளவியலிலே வாசிப்பவன் வாழ்கின்றான் என்பதன் அர்த்தமும் இதுதான். அதே நேரம் எங்களுடைய வாழ்க்கை மிக சிறந்த முன்மாதிரிமிக்க வாழ்வாக அடுத்தவர்களும் பார்த்து பின்பற்ற விரும்புகின்ற வாழ்வாக இருக்கும் வேண்டுமாக இருந்தால் எங்களுடைய வாசிப்பு வாழ்வில் நடைமுறைக்கு வருவதை எம்மைச் சூழ இருக்கின்றவர்கள் காண வேண்டும்

வாசகர்களாகிய ஒவ்வொருவரும் மனதில் நினைத்துக் கொள்ள வேண்டிய ஒரு விடயம் இருக்கின்றது. அதுதான் நாங்கள் எந்த அளவு தூ ரம் வாசித்தாலும் எங்களை விட இன்னும் அதிகமாக பரந்த அளவில் வாசிக்கக்கூடிய இன்னும் பலர் இருப்பார்கள் என்ற உணர்வு எங்களிடம் வரவேண்டும். அதேபோல வாசிப்போடு தொடர்பற்றவர்கள் வாசிப்புக்கு நெருக்கமே இல்லாதவர்கள் சம்பந்தம் இல்லாதவர்களை காண்கின்ற பொழுது அவர்களோடு எங்களை ஒப்பிட்டு நாங்கள் பெருமிதம் கொள்ளக் கூடாது இந்த முக்கியமான இரண்டு துருவங்களுக்கும் மத்தியில் நாம் நடுநிலை பேணிக் கொள்ள வேண்டும் இது எங்களுடைய வாழ்க்கையை அழகாக்கும் வளமாக்கும் செழிப்பாக்கும்.

எமது கல்வியை அறிவை சிந்தனையை விருத்தி செய்யும் வாசிப்பு

ஒரு போதும் எமக்குள் அகங்காரத்தை ஆணவத்தை அறிவிச்சருக்கை உருவாக்கி விடக் கூடாது எங்களுக்கு அறிவை கற்பிக்கக் கூடியவன் அறிவை அள்ளித் தருகின்றவன் இறைவன் ஆவான் எனவே இறைவன் கண்ணியமானவன் அறிவை சுமந்தவர்களும் இறைவனிடத்திலே கண்ணியமானவர்கள் இப்படி இருக்க இயல் வாசிப்பதால் அறிவு பெருகுவதை கண்டு அகங்காரத்தோடு நடப்பவர்களே இறைவன் விரும்ப மாட்டான். அத்தகைய வாழ்க்கை பயனுள்ள வாழ்க்கையாக இருக்காது. இறைவன் தரக்கூடிய அறிவுக்குச் செய்யக்கூடிய நன்றிக் கடன் அடக்கமாக பணிவாக இருப்பதும் அந்த அறிவின் மூலம் பயனுள்ள விடயங்களை செய்வதும் அடுத்தவர்களது வாழ்வை மேலோங்கச் செய்வதற்கு உதவி செய்வதும் தான்

எனவே எமது வாசிப்பு அறிஞர்களை மட்டம் தட்டுவதற்கோ அறிவிலிகளோடு விவாதம் செய்வதற்கோ எமக்கு சம்பந்தமில்லாத விடயங்களில் மூக்கை நுழைத்து எம்முடைய பெருமிதத்தை காட்டிக் கொள்வதற்கோ அமைந்துவிடவே கூடாது.

பெருந்தொகையை நூல்களை அடக்கி இருக்கின்ற நூலகங்கள் எப்பொழுதும் அமைதியாக இருப்பது போல அறிவை சுமந்தவர்களும் அமைதியாக இருக்க வேண்டும் அவசியமான சந்தர்ப்பங்களில் மட்டும் தான் தன்னுடைய அறிவை திறந்து காட்ட வேண்டும்.

வாசிப்பே பயனுள்ள முறையில் நாங்கள் அமைத்துக் கொள்வது தான் எங்களுடைய வாழ்வை தரமுள்ள வாழ்வாக அமைத்து விடும் பயனுள்ள வாழ்வாக அமைத்துவிடும்.

வாசித்து என்னுடைய சிந்தனை மெருகூட்டப்படவில்லையானால் எம்முடைய நடைமுறை வாழ்க்கையிலே பணிவும் அடக்கமும் பக்குவமும் வரவில்லை ஆனால் பெருமையும் பெருமிதமும் அகங்காரமும் தான் எமது அணிகலனாக இருக்குமானால் எங்களை பார்க்கின்றவர்கள் வாசிப்பை விட்டும் தூர விலகி விரண்டோடுவார்கள். வாசிப்பிலிருந்து விடுபட்டுப்போவார்கள். வாசிப்பை அழகாக்கி வாழ்வையும் அழகாக்குவோம்

## மனநலமும் ஆலோசனையும் 85

# பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு...!

அன்பின் மாணவர்களே..!

நாம் ஏதேனும் ஒரு பரீட்சையில் சித்தியடைந்தால் இயல்பாகவே எமக்குள் சந்தோசமும் வெற்றியுணர்வும் உருவாகும். பாராட்டுக்கள் கிடைக்கும். அவற்றை அனுபவிப்பதில் தப்பில்லை. ஆனால் எல்லை மீறாமல் இருப்பது முக்கியமாகும். பரீட்சையில் சித்தியடைந்த எம்மிடமிருந்து அழகான சில குணங்கள் வெளிப்பட வேண்டும். அந்தக் குணங்கள் மூலம் நாம் இன்னும் பெற்றி பெறலாம். மற்றவர்களுடைய உண்மையான பாராட்டைப் பெற்று அவர்களையும் வெற்றியாளர்களாக மாற்றலாம். அந்த குணங்களில் முக்கியமான சிலவற்றை தெரிந்து கொள்வோம்.

– நாம் எதில் வெற்றி பெற்றாலும் எப்போதும் தாழ்மையாக இருக்க வேண்டும். சாதித்துவிட்டதான பெருமை வந்துவிடக்கூடாது.

– நண்பர்களுடன் அன்பாகவும், ஒத்துழைப்பாகவும் பழகுவதை உறுதிப்படுத்துவோம்.

– பரீட்சைகள் வாழ்க்கையின் ஒரு பகுதி மட்டுமே, முடிவு அல்ல. தினமும் புதிய விடயங்களை அறிய ஆர்வம் காட்டுவோம்.

– படிப்புடன் விளையாட்டு, அன்றாட வீட்டு வேலைகள், கலை, சமூக சேவைச் செயல்களில் பங்கேற்பதும் முக்கியமாகும்.

– வாழ்க்கைப் பயணத்தில் அவ்வப்போது சந்திக்கும் தோல்விகளை, பின்னடைவுகளை அனுபவமாக ஏற்றுக்கொள்வோம்.

– "நான் பல திறமைகள் கொண்ட மனிதன்" என்ற நம்பிக்கையை கொண்டுவருவதுடன், மதிப்பெண்கள் மட்டும் எங்கள் மதிப்பைக் கூறுவதில்லை. என்பதை நினைவில் வைத்து,

படிப்புக்குப் போன்று தனிப்பட்ட வேலைகளுக்கும் நேரம் கொடுப்போம்.

– படிப்பு, படிப்பு என்று இருந்து விடாமல் குடும்பத்துடன் உரையாடவும், உண்டு மகிழவும், உதவவும் நேரம் கொடுப்போம்.

– பரீட்சையில் வெற்றி பெறாதவர்களுடன் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதிலும் நாம் அவதானம் செலுத்த வேண்டியிருக்கிறோம்.

– பரீட்சையில் சித்தியடையாத மாணவர்களுடன் அன்பையும் மரியாதையையும் காட்டுவதில் தவறக் கூடாது.

– நண்பர்களை இகழவோ, கேலி செய்யவோ கூடாது.

அவர்கள் முயற்சியையும் உழைப்பையும் பாராட்டுவோம். "அடுத்து வரும் பரீட்சைகளில், போட்டிகளில் நீயும் பங்குபற்றி வெற்றி அடையலாம்", "உனக்கு எ்ளும் நல்ல ஆற்றல்கள் நிச்சயமாக இருக்கும்" போன்ற ஊக்கமான வார்த்தைகளைச் சொல்லி ஊக்கம் கொடுப்போம்.

– அவர்களை விட்டு விடாமலும், விட்டு விலகாமலும் சேர்ந்து விளையாடுவோம், சேர்ந்து செயல்படுவோம்.

– தேர்வின் அடிப்படையில் நண்பர்களை பிரிக்கக் கூடாது.

சித்தியடைந்த மாணவர்களுடன் மட்டும் பழகாமல் எல்லோருடனும் ஒன்று போல் பழகும் நடத்தையுடையவராக எம்மை வெளிப்படுத்திக் காட்டுவோம்.

– தோல்வி வாழ்க்கையின் ஒரு பகுதி மட்டுமே, வெற்றி பெற வாய்ப்புகள் இன்னும் நிறைய உள்ளன என்பதை நினைவூட்டுவோம்.

வெற்றி பெற்ற மாணவர்களும், பெற்றோர்களும் தாழ்மையுடனும் மற்றவர்களை ஊக்குவிக்கும் மனப்பாங்குடனும் நடந்து கொண்டால், அனைவருக்கும் நல்ல மனநிலை உருவாகும். இது மாணவர்களுக்கு "வெற்றி தோல்வி" என்ற தவறான எண்ணம் உருவாகாமல் தடுக்க உதவியாக இருக்கும்.



அஸ்ஹர் அன்ஸார் FRSPH (UK)
மனோதத்துவ ஆலோசனை நிபுணர்
மனோதத்துவ எழுத்தாளர்

# அரசின் ஆதரவுடன் STEM Feed திட்டத்தை இலங்கையில் அறிமுகப்படுத்திய TikTok

சமூக ஊடக நிறுவனமான TikTok, இலங்கை அரசாங்கத்தின் ஆதரவுடன் விஞ்ஞானம், தொழில்நுட்பம், பொறியியல் மற்றும் கணிதத் துறைகளுக்கான கல்வி உள்ளடக்கங்களை சமூகமயப்படுத்தும் "STEM Feed" ஐ உத்தியோகபூர்வமாக அறிமுகப்படுத்தியுள்ளது. இப்புதிய in-app தளத்தின் மூலம் பயனர்களுக்கு கல்வி சார்ந்த உள்ளடக்கங்களை எளிதாக அணுக வழிவகுக்கிறது.

இந்த புதிய முயற்சி, டிஜிட்டல் யுகத்தில் கல்வியை பரவலாக்குவதற்கான ஒரு புதிய காலகட்டத்தின் ஆரம்பத்தைக் குறிக்கிறது. அத்துடன், இந்தக் கூட்டுமுயற்சியின் மூலம் இலங்கையின் இளைஞர்கள் தரமான கல்வி உள்ளடக்கங்களை எளிதில் அணுகி பயனடைய முடியும் என்பதுடன், STEM துறைகளில் மாணவர்களின் ஆர்வத்தை அதிகரிக்கவும், டிஜிட்டல் கல்வியறிவை மேம்படுத்தவும் இந்த முயற்சி பெரிதும் உதவும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கொழும்பில் வியாழக்கிழமை (செப்டம்பர் 11) நடைபெற்ற அறிமுக விழாவில், பிரதமரும், கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சருமான கலாநிதி ஹரினி அமரசூரிய பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார். இந்நிகழ்வில் TikTok நிறுவனத்தின் பிரதிநிதிகள், அரசின் உயர் அதிகாரிகள், கல்வி அதிகாரிகள், கல்விமான்கள் மற்றும் STEM Feed கல்வியில் பங்களிப்புச் செய்யும் இலங்கை உள்ளடக்க உருவாக்குநர்கள் கலந்துகொண்டனர்.

TikTok இல் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள பிரத்தியேக STEM Feed என்பது பயனர்கள் அறிவியல், தொழில்நுட்பம், பொறியியல் மற்றும் கணிதம் சார்ந்த தரமான உள்ளடக்கங்களின் தெரிவுசெய்யப்பட்ட தொகுப்பை ஆராய உதவும் சிறப்பு in-app அம்சமாகும். இது ஆர்வத்தை தூண்டுவதற்கும், ஆய்வுச் சிந்தனையை வளர்ப்பதற்கும், குறிப்பாக இலங்கையின் மாணவர்கள், கல்வியாளர்கள் மற்றும் இளம் தொழில்முறை வல்லுநர்களுக்கான டிஜிட்டல் கற்றல் வாய்ப்புகளை விரிவாக்குவதற்கும் வடிவமைக்கப்பட்டுள்ளது. மேலும், TikTok #StemTok என்ற சிறப்பு ஹேஷ்டேக்கையும், ஒரு தனி இணையப்பக்கத்தையும் அறிமுகப்படுத்தியுள்ளது. இதில் பங்காளிகள், படைப்பாளிகள் மற்றும் வெளியீட்டாளர்கள் உருவாக்கிய உள்ளடக்கங்கள் இடம்பெறும், இது நாட்டில் உள்ளூர் மொழியில் STEM Feed தொடர்பான தகவல்களை எளிதாக அணுக உதவும்.



TikTok இன் STEM Feed அறிமுக விழாவில் பேசிய பிரதமர் கலாநிதி ஹரினி அமரசூரிய, இந்த ஆரம்பத்தை முக்கியமான முன்னேற்றப் படியாக சுட்டிக்காட்டினார். "TikTok போன்ற சர்வதேச பங்காளிகள் இலங்கை அரசாங்கத்தின் இலக்குகளுக்கு ஒத்துழைப்பு வழங்கும் போது, வுமைவழும அந்த இலக்குகளை வலுவாகவும், பயனுள்ளதாகவும் மாற்ற உதவுகிறது. அவர்களின் பங்கேற்பு இந்த திட்டத்திக்கு கூடுதல் வலிமை, புதிய யோசனைகள் மற்றும் மாறுபட்ட கண்ணோட்டங்களைக் கொண்டுவருகிறது. மேலும், இந்த முயற்சி நாடு முழுவதும் அதிகமான மக்களைச் சென்றடைய உதவுகிறது. அரசாங்க செயற்குழு முதலில் வுமைவழும உடன் இணைந்து பணியாற்ற ஆரம்பித்த போது, பொழுதுபோக்கை விட அதிகமான விடயங்களுக்கு இந்த தளத்தைப் பயன்படுத்த முடியுமா, கற்றல் மற்றும் கல்வியை ஊக்குவிப்பதற்கும் அதைப் பயன்படுத்த முடியுமா என்று நாங்கள் கேட்டோம். அதற்கான பதில் இன்று உங்கள் முன்னால் உள்ளது. STEM Feed ஆரம்பம் எங்கள் கூட்டாண்மையின் பிரதி பலனாகும்" என்று அவர் கூறினார்.

டிஜிட்டல் கல்விக்கான இந்த மைல்கல் குறித்து கருத்து தெரிவித்த வுமைவழும நிறுவனத்தின் தெற்காசியாவுக்கான பொதுக் கொள்கை மற்றும் அரச உறவுகளுக்கான தலைவர் ஃபெர்டௌஸ் மொட்டகின், "இலங்கையில் STEM Feed அறிமுகம் என்பது வெறுமனே கல்வி சார்ந்த உள்ளடக்கங்கள் அணுகுவதை விரிவுபடுத்துவது மட்டுமல்ல, அத்தகைய கற்றல் பாதுகாப்பான, வெளிப்படைத்தன்மை கொண்ட மற்றும் நம்பகமான டிஜிட்டல் சூழலில் நடைபெறுவதை உறுதிசெய்வது ஆகும். கல்வி மற்றும் தொழில்நுட்பத்தின் எதிர்காலத்தை வடிவமைப்பதில் இளைஞர்கள் முக்கிய பங்கு வகிக்கின்றனர். பெற்றோர்கள், கல்வியாளர்கள் மற்றும் அரசாங்கத்துடன் இணைந்து செயல்படுவதன் மூலம், டிஜிட்டல் தளங்கள் தேசிய முன்னேற்றத்திற்கு எவ்வாறு பங்களிக்க முடியும் என்பதற்கு இலங்கை ஒரு பிராந்திய முன்மாதிரியாக திகழும் என என நாங்கள் நம்புகிறோம்." என தெரிவித்தார்.

பயாஸா பாஸில்





பெண்கள் வாழ்க்கையில் பல்வேறு பொறுப்புகளை ஏற்று செயல்படுகிறார்கள். குடும்பம், வேலை, கல்வி என அனைத்திலும் முழுமையாக ஈடுபடுகிறார்கள். இந்த பிஸியான நாள்சுற்றத்தில்



# பெண்களின் பொழுதுபோக்குகள்

மனஅழுத்தத்திலிருந்து விடுபட்டு, மனநிறைவை பெற உதவுவது பொழுதுபோக்குகள் ஆகும்.

பெண்களின் பொழுதுபோக்குகள் பல வகையாக உள்ளன. சில பெண்கள் சமையல் மற்றும் புதிய உணவுகள் செய்வதில் ஆர்வம் காட்டுகிறார்கள். சிலர் நூ லோடு தையல், ஓவியம், பாடல், நடனம் போன்ற கலைகளில் ஈடுபடுகிறார்கள். இவை அவர்களின் படைப்பாற்றலை வெளிப்படுத்துகிறது.

இன்றைய இளைஞர் பெண்கள் புத்தக வாசிப்பு, இணையம், வலைப்பதிவு எழுதுதல், யூடியூப் சேனல் நடத்துதல் போன்ற நவீன பொழுது போக்குகளிலும் ஈடுபடுகின்றனர். அதேபோல் தோட்டப் பணிகள், மரக்கன்றுகள் நடுதல் போன்ற சுற்றுச்சூழலை பாதுகாக்கும் பொழுதுபோக்குகளும் பல பெண்களிடம் காணப்படுகிறது.

பொழுதுபோக்கு செயல்கள் பெண்களின் மனநலத்தையும் உடல் நலத்தையும் மேம்படுத்துகின்றன. அத்துடன் தன்னம்பிக்கை, படைப்பாற்றல், சமூக உறவுகள் ஆகியவற்றையும் வலுப்படுத்துகின்றன.

எனவே, பெண்கள் தங்களின் விருப்பப்படி ஒரு பொழுதுபோக்கைத் தேர்ந்தெடுத்து அதில் ஈடுபட்டால், வாழ்க்கை மேலும் மகிழ்ச்சியுடனும் சமநிலையுடனும் அமையும்.




நாச்சியாதீவு பர்வீன்

# நீங்காத நினைவுகள் - நூலனுபவம்

அஷ்ஷெய்க் அஹ்மத் பிஸ்தாமி
மள்வானை

அறிவுரைகளை அள்ளி வீசுவதனை விட அனுபவங்களை அன்பாக உள்ளங்கையில் வைத்து விடுகின்றார் நூலாசிரியர்

அள்ளிப் பருகலாம் அனைவரும்,

என்னைக்கவர்ந்த பன்முக பேராளுமைகளுள் இவர் முக்கியமானவர்.

பேச்சாளர், எழுத்தாளர், மொழிபெயர்ப்பாளர், பன்னூல் ஆசிரியர், ஆசிரிய ஆலோசகர் ஆய்வாளர், ஓவியர் ஆசிரியர், நிர்வாகி, இலக்கியவாதி, பத்திரிகை நிருபர் என அடுக்கிக்கொண்டே போகலாம்....

அவருக்கு தமிழ் சிங்களம் ஆங்கிலம் போலவே ப்ரெஞ்சு மொழியிலும் ஈடுபாடுண்டு

அடக்கமான மனிதர். அவரின் அறிவு ஒருபுறமிருக்க அனுபவங்களால் மட்டுமே எழுத்துத் துறையில் பெருஞ்சாகரம் ஒன்றை உருவாக்கலாம். அவருடைய அத்துணை எழுத்துக்களிலும் அந்தளவு திரட்சியான அனுபவங்கள் நிரம்பி இருக்கும்.

எத்தனையோ வரலாற்று நூல்களை வாசித்திருந்தாலும் அவை தராத ஒருவித வாழ்வியல் அனுபவத்தை உத்வேகத்தை இந்த நூல் தந்தது எனலாம் இதனை உணர்கையில்

Francis Bacon

கூடிய ஒரு கூற்றும் நினைவுக்கு வந்தது

Some books are to be tasted, others to be swallowed, and some few to be chewed and digested; that is, some books are to be read only in parts; others to be read, but not curiously; and some few are to be read wholly, and with diligence and attention.

அதன்படி சுவைக்கவும் விழுங்கவும் செரிமானமடையவும் தகுதியான ஒரு தரமான நூலாக இதனை கருதுகின்றேன் ஏனைய ஆசிரியர்களுக்கும் பரிந்துரை செய்கின்றேன்

வாசிக்க வாசிக்க வற்றாத ஊற்றாய் பெருக்கெடுத்து விடுகிறது உங்கள் பழங்கால நினைவுகள்

அத்தனையும் பாடங்களும் படிப்பினைகளும் தான்.

வாழ்க்கை இப்படித்தான். எம்மைச் சூழ உள்ளவர்களும் இப்படித்தான் என்பதனை அழகாக எழுத்தோவியமாய் வடித்துத் தந்திருக்கிறீர்கள்

முதலில் உங்களுக்கு பெருத்த நன்றிகள்

அவர் எந்த அளவுக்கு ஆரம்ப முதல் தன்னை ஒழுங்கமைத்திருக்கிறார் என்பதனை நான் இதுவரை காணாத என் கண்ணில் படாத அவருடைய நாட்குறிப்புகளை கற்பனையா கண்முன்னே கொண்டு வந்தால் புரியும். அந்த அளவு நுணுக்கமாக அனைத்தையும் நினைவு கூர்ந்து பதிந்து வைத்திருக்கின்றார்.

தனது அனுபவ நூலில் ஓர் இடத்தில் தன்னை தெல்லிப்பலையில் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த வேளை மூவேளையும் தன்னை பார்க்க வந்த காலி ஜிப்ரி குறித்தும் ஏனையோர் குறித்தும் நாட்குறிப்பில் பதிந்து வைத்திருப்பதாக கூறுகிறார்.

அவரது வாழ்வின் ஆரம்பம் முதல் இதுவரை ஒவ்வொன்றையும் அவர் பதிய வைத்து வருகிறார் என்பதனை அவருடைய முகநூல் பதிவுகள் உலகிற்கு எடுத்துரைக்கின்றன. அவர் தொடர்ந்து multi faced dynamic personality

எனும் நாமத்துக்கு அருகதை உள்ளவர் என்பதனை துணிவோடு எடுத்துரைக்கலாம்.

264 பக்கங்களைக் கொண்ட கனதியும் செறிவும் மிக்க இந்நூலில் 66 தலைப்பிட்டு அனுபவங்களைப் பகிர்ந்து கொள்கின்றார்.

உண்மையில் புத்தகத்தை கையில் எடுத்தால் வைக்க முடியாத அளவு அடுத்தடுத்த பக்கங்களை வாசகர்களின் விரல்கள் நிச்சயம் புரட்டிவிடும். அலுப்பில்லாத மொழி. தெவிட்டாத அனுபவங்கள். உள்ளத்தை தொடும் நினைவுகள். வருடும் நீங்காது நினைவுகள்.

தனது ஆசிரியர் பயிற்சி முடிந்த பிற்பாடு அறக்கப்பறக்க எந்தப் பாடசாலைக்கு செல்ல வேண்டுமென்ற நியமனக் கடிதத்தை பெறுவதற்காக படும் பாடு இன்றுவரை அரச அலுவலகங்களில் இருப்பதுதான் இந்நாட்டின் பின்னடைவுக்கு முக்கிய காரணம் என்பதனை பக்கத்தையும் குறித்துக்கொள்ள மறந்து விட்டோமே என பலரும் நினைக்க முன் வருகின்ற இடங்கள் தான் எல்லாமே

எவ்வளவு துணிச்சலாக அந்த அதிபருக்கு கடிதம் எழுதுகிறார்? பின்னாலிருந்து வைன் பண்ணிவிட எத்தனை மாணவர்கள் நண்பர்களாக இருக்கின்றார்கள் என்பதையும் தன்னுடைய சகாக்கள் எப்படி எப்படி எல்லாம் தூண்டி விட்டார்கள்? தூண்டுகின்றார்கள் என்பதில் தொடங்கி அனுபவப்பயணம் ஆரம்பமாகிறது

அதில் வரும் ஷாபி மரீக்கார் அவருடைய அதிபர் என்பதை வாசிக்கையில் ஏ எம் நஹியா எழுதிய "இலங்கையில் முஸ்லிம் கல்வி ஷாஃபி மரிக்கார் சிந்தனையும் பங்களிப்பும்" என்ற நூல் அப்படியே மனக்கண் முன் நிழலாடுகிறது (அது அதே ஷாபி மரிக்காராகத்தான் இருக்க வேண்டும்)

தனது கார் பயணத்தில் உம்மாவையும் பதறவைத்து கடைசியில் பூனைக்கும் பொருந்தாத மீனாக வீணாக ஆக்கி விடுகின்றார் பாவம் அந்த மீன்.

உம்மா சொன்னது போலவே தன் அழகிய டைப் ரைட்டர் கையெழுத்து அவரை தலைகுனிய வைத்தாலும் துணிவோடு முன் சென்றது அவரது அப்பாவித் தனத்தை காட்டுகிறது

கரும்பிலிருந்து வந்த அரும்புக்காய் பெரும் பாடுபட்ட அவருடைய சுவாரசியமான இலக்கிய எழுத்து சார் அறிவியல் பயணம் இன்று வரை பாராட்டத்தக்கது அவருடைய அரும்பின் அதிரடி வாசகராக இருந்ததையிட்டு மனதில் இப்பொழுதும் மகிழ்ச்சி எழுகிறது.


நதியோடு கொண்ட உறவுகள் இப்பொழுது வெளிநாட்டு உல்லாச பயணிகளுக்கு நினைவூட்டுகிறது அந்தப் பத்தி. ஆனாலும் கொஞ்சம் கூட பொறுப்பில்லாமல் கையில் இருந்து நீர் கோப்பையை முஸ்லிம் அதிபரின் சோற்றுப்பீங்கானில் கொட்டியது தவறுதான்

நூலை வாசிக்கையில்,

எமது வாழ்வின் ஒவ்வொரு

ஆனாலும் பாவம் அந்த செல்லையா டீச்சர்

உண்மையில் தாயக மண்ணில் அவருடைய சகவாழ்வு அனுபவங்கள் எல்லோருக்கும் பாடமாக கிடைப்பதில்லை.




தாரைவாக்கப்பட்டு இருப்பதாக அவர் உள்ளத்தில் எழும் கவலை தேசபக்தியின் வெளிப்பாடு மட்டுமல்ல பூர்வீக மண் மீது கொண்ட காதலையும் எடுத்துச் சொல்கிறது

உதவி தேடிச் சென்ற ஹாஜியார் முகத்தில் அந்த கடிதத்தை துண்டு துண்டாய் கிழித்ததை நினைக்கும் பொழுது இன்னும் அத்தகைய திமிறு பிடித்த ஹாஜியர்கள் இருக்கத்தான் செய்கின்றனர் என்பதனை கடந்து போகத் தான் வேண்டும்.

வாழ்க்கையில் முதல் இழப்பு அதேபோல ரத்மலானையில் விமான நிலையத்தில் பயிற்சி அனுபவம் இப்படி ஒவ்வொன்றாக தனித்தனி கட்டுரைகளாக அனுபவ பகிர்வாக எழுதிக் கொண்டே செல்லலாம். ஆனாலும் வாசகர்களின் நலன் கருதி அதனை செய்வதை விட்டுவிடுகின்றேன்.

உலகின் தலைசிறந்த இஸ்லாமிய பேரறிஞராகிய கலாநிதி யூசுப் அல் கர்ளாவி அவர்களது "திப்லுன் மினல் கர்யா" நூல் அவருடைய வாழ்க்கை சரிதையாக அமைகிறது...

அதேபோல எகிப்தைச் சேர்ந்த ஸைனப் அல் கஸ்ஸாலி "அய்யாம் மின் ஹயாதீ" மூலம் தன் அனுபவங்களை வரலாறாக வடித்து தருகிறார்

இப்படி உலக வரலாற்றில் தன் வரலாறுகளை சுவைபட கூறும் நூல்கள் பல...

இந்த முறைகளை எல்லாம் கடந்து தன்னுடைய முழுமொத்த அனுபவங்களையும் ஒன்று திரட்டி தனித்தனி தலைப்புகளாக சுவாரசியமாக அதே நினைவுகளோடு பகிர்ந்து கொள்ளும் பிரபல விஞ்ஞான பாட ஆசிரியர் ஹாபிஸ் இஸதீன் ஸேர் அவர்களது கையெழுத்து எவ்வளவு அழகானதோ அதுபோல அவருடைய சித்திரங்களும் ஓவியங்களும் அழகானவை தான் அந்த வகையில் தன்னுடைய அழகிய நினைவுகளையும் வாசகர்களோடு பகிர்ந்து கொள்கின்றார்.

மிக அருமையான நூல் "மூத்தோர் சொல் வார்த்தை அமிர்தம்" என் பார்கள் அதற்கு ஏற்றாற் போல் தன்னுடைய அனுபவங்களை தன் கைப்பட எழுதி வாசகர்களுக்கு விட்டிருக்கும் அவருக்கு வாழ்த்துக்களும் பாராட்டுக்களும் பிரார்த்தனைகளும் தொடரட்டும்

இறைவன் அவருக்கு நீண்ட ஆரோக்கியமான வாழ்வை வழங்க வேண்டும் சமூகம் வளரும் எழுத்தாக்க பணிகளில் ஈடுபடக்கூடிய வாய்ப்புகளை தொடர்ந்தும் கொடுக்க வேண்டும் என்றும் பிரார்த்தித்துக் கொள்கின்றேன்

மூத்தவர்கள் இளையவர்களுக்கு எப்பொழுதும் அறிவுரைகளை மட்டுமே கூறிக் கொண்டிருக்காமல் அறிவுரைகளை விடவும் ஆழமாக பதியக்கூடிய அனுபவக் கையளிப்புக்களை கையளிக்க வேண்டும். அதுவே நிலையானது பயன் தரத்தக்கது. அதனை மிக அருமையாக செய்திருக்கின்றார் ஆசிரியர் ஹாபிஸ் இஸ்ஸதீன் எம் எல்லோரதும் மனங்களை வென்ற மனங்களில் பிரார்த்தனைகளோடு வாழ்கின்றார்.

# பிரபல சமூக சேவையாளரும் மாணிக்கக் கல் வர்த்தகருமான பவ்ஸி ஹாஜியார் காலமானார்

(பீ.எம்.முக்தார்)

களுத்துறை மாவட்ட முஸ்லிம் லீக் வாலிப முன்னனிகள் சம்மேளன முன்னாள் தலைவரும் பிரபல மாணிக்கக் கல் வர்த்தகருமான அல்-ஹாஜ் ஏ.எஸ்.எம்.பவ்ஸி தனது 78வது வயதில் 14ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மக்கொனை இந்திரிலி கொடை இல்லத்தில் காலமானார்.

நான்கு பிள்ளைகளின் தந்தையான இவர் களுத்துறை மாவட்டத்தில் முன்னனி சமூக சேவையாளராகவும் அலவியத்துல் காதிரிய்யா தரீக்காவின் மூத்த இஃவான்களில் ஒருவராகவும் திகழ்ந்தார்.

களுத்துறை மாவட்ட முஸ்லிம்களின் கல்வி சமய,சமூக, பொருளாதார மேம்பாட்டிற்காக அளப்பெரிய பங்காற்றிய மர்ஹூம் ஏ.எஸ்.எம். பவ்ஸி ஹாஜியார் முன்னாள்



சபாநாயகர் மர்ஹூம் தேசமான்ய அல்-ஹாஜ் எம்.ஏ.பாக்கீர் மாக்கார், முன்னாள் ஊடகத்துறை அமைச்சர் அல்-ஹாஜ் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் ஆகியோருடன் மிக நெருக்கமாக இருந்து தான் பிறந்த ஊருக்கும் களுத்துறை மாவட்ட முஸ்லிம்களுக்கும் பல சேவைகளைப் பெற்றுக் கொடுத்தார் அன்னாரின் ஜனாஸா 15ம் திகதி திங்கட்கிழமை ளுகர் தொழுகையுடன் மக்கொனை முகியத்தீன் ஜும்ஆ பள்ளிவாசல் மய்யவாடியில் நல்லடக்கம் செய்யப்படும்.

# உக்குவல அஜ்மீரில் மீலாத் நிகழ்வு

(உக்குவல ஜலீல்)

நபிகளார் பிறந்த இந்த ரபீஉல் அவ்வல் மாதத்தை முன்னிட்டு உக்குவல அஹதிய்யா பாடசாலை மாணவர் மாணவியர்கள் பங்குபங்குபற்றிய மார்க்க நிகழ்ச்சிகள் நேற்றையதினம் உக்குவல அஜ்மீர் தேசிய பாடசாலை மண்டபத்தில் மேடையேற்றம் செய்யப்பட்டன

உக்குவல அஹதிய்யா பாடசாலை தலைமை ஆசிரியை திருமதி பர்ஹானா அவர்களது ஏற்பாட்டில் நடாத்தப்பட்ட இந்நிகழ்வில் சக ஆசிரியை சர்மிளா உட்பட மௌலவி ஆசிரியர்களும் கலந்துகொண்டதுடன் இந்நிகழ்வில் தலைமை வகித்த முன்னாள் பிரதி அதிபரும் அஹதிய்யா பாடசாலை அதிபருமான ஹாஜி ஹலீம்தீன் அவர்கள் தனது பேச்சின்போது தெரிவிக்கையில்,

உக்குவல அஹதிய்யா பாடசாலை பல வருபங்களுக்குமுன் ஆரம்பிக்கப்பட்டு இன்றுவரை சிறப்பாக இயங்கிவருகிறது பரீட்சைகள் திணைக்களத்தினால்



நடாத்தப்பட்ட உயர்தரப் பரீட்சை, ஆண்டிறுதிப் பரீட்சை, மற்றும் தர்மாச்சாரிய ஆகிய பரீட்சைகளிலும் தோற்றிய எமது அஹதிய்யா மாணவியர்கள் சித்திபெற்றுள்ளமை குறித்து பெருமிதமடைவதுடன் அவ்வப்போது அரச உதவிகளும் எமக்குக் கிடைக்கின்றன இந்நிலையில் மாத்தளை மாவட்டத்தில் சில இடங்களில் அஹதிய்யா பாடசாலைகள் இயங்காதுள்ள நிலையில் எமது பாடசாலை மட்டும் வளர்ச்சியடைந்துவருகிறது இதற்காக பங்களிப்புக்களை நல்கிவரும் பெற்றோர் ஆசிரியர் ஆசிரியைகள் அனைவரையும் பாராட்டுவதுடன் இன்றைய ரபீஉல் மாதத்தை முன்னிட்டு எமது அஹதிய்யா மாணவர் மாணவியர்களது மார்க்க நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்து மேடையேற்றம் செயதுள்ளோம். இதனை ஏற்பாடு செய்த ஆசிரியர் தலைவி திருமதி பர்ஹானாவைப் பாராட்டுகிறோம். எனவே அஹதிய்யா பாடசாலைகளின் வளர்ச்சிக்காக எம் சமூகம் ஒத்துழைப்பு நல்குவது அவசியமாகும் - என்றார்.

# இலங்கை முஸ்லிம் அரசியலின் திறவுகோல் எம்.எச்.எம்.அஷ்ரப்!

*(மர்ஹூம் எம். எச். எம். அஷ்ரப் அவர்களின் 25 ஆவது நினைவு தினம் 16/09/2025 அன்று நிந்தவூரில் நடைபெற உள்ளது அதை முன்னிட்டு இக்கட்டுரை பிரசுரிக்கப்படுகிறது)*

**நாச்சியாதீவு பர்வீன்**

அஷ்ரப் எனும் முஸ்லிம் அரசியல் மேதை மரணித்து இப்போது 25 வருடங்கள் கடந்துவிட்டன! இந்தக் கால் நூற்றாண்டில் அஷ்ரபின் அபிலாசைகள் அரசியல் எதிர்பார்ப்புகள், தூர நோக்கிலான அரசியல் எண்ணங்கள் போன்றவற்றை முஸ்லிம் சமூகம் பெற்றுக் கொண்டதா? என்ற கேள்வி அஷ்ரபை நேசிக்கின்ற ஒவ்வொரு தனி மனிதனுக்குள்ளும் எழுவது தவிர்க்க முடியாததாகும்.

மர்ஹூம் அஷ்ரப் அவர்களை ஒரு அரசியல்வாதியாக மட்டுமே பார்க்கின்ற அநேகருக்கு அவரது அரசியல் ஞானமும் அரசியலில் அவர் வகுத்த வியூகமும், அவரது அரசியல் நகர்வுகள் மூலம் முஸ்லிம் சமூகத்திற்கு ஒரு அந்தஸ்தை பெற்றுக் கொடுத்ததையும் வசதிக்காக மறந்து போகின்றனர். ஒரு தனி மரம் எப்படி தோப்பாகுமோ! அப்படித்தான் அஷ்ரப் என்னும் ஒரு தனி அரசியல்வாதி முஸ்லிம் சமூகத்திற்காக தனி மனிதனாய் களத்தில் நின்று அச்சமுகத்தின் விடிவுக்காய் கல்வி, அரசியல் பொருளாதாரம் எல்லாவற்றிலும் முன்னேற்றம் கண்ட ஒரு சமூகமாக மாற்றி அமைப்பதில் சிரத்தையுடன் செயல்பட்டார்.

அஷ்ரபின் காலத்தில் அவர் கிழக்கில் உதித்த விடிவெள்ளியாக முஸ்லிம் சமூகத்தில் பார்க்கப்பட்டார். அஷ்ரபின் எழுச்சிமிக்க பேச்சினை கேட்பதற்கு மக்கள் அலையாகத் திரண்டனர். முஸ்லிம்கள் சிறுபான்மையாக வாழுகின்ற வடகிழக்கை தாண்டிய பிரதேசங்களிலும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் என்கின்ற தனது கட்சியையும் மர சின்னத்தையும் தைரியமாக கொண்டு சென்று அதில் வெற்றியும் பெற்றார் எம்.எச். எம் அஷ்ரப்.



இலங்கை அரசியல் வரலாற்றில் அங்கீகரிக்கப்பட்ட ஒரு கௌரவமான இனக் குழுமமாக முஸ்லிம் சமூகத்திற்கு ஒரு அந்தஸ்தை பெற்றுக் கொடுப்பதில் மர்ஹூம் எம்.எச்.எம் அஷ்ரபின் பங்களிப்பு மிகையானது. பன்முகக் கட்டமைப்பில் பல இனங்கள் தனித்தும் கூட்டாகவும் வாழுகின்ற இலங்கை போன்ற நாட்டில் அஷ்ரபின் "தேசியத்துக்குள் ஐக்கியம்" என்ற தொனிப் பொருள் அனைத்து சமூகத்தினாலும் அங்கீகரிக்கப்பட்டதாகவே இருந்தது. இதுவே அனைத்து சமூகத்தினரையும் அரவணைத்துச் செல்லக்கூடிய நுஆ (ரேயு-யேவழையெட ருவைநன யுடடயைஉநு) தேசிய ஐக்கிய கூட்டணி என்ற கட்சியின் அடித்தளத்துக்கு வித்திட்டது எனலாம். அஷ்ரப் அரசியல் ரீதியாக மேற்கொண்ட எல்லாம் முயற்சிகளின் பின்னணியிலும் முஸ்லிம் சமூகத்தின் விடிவும், எதிர்காலமும், எழுச்சியும், ஒற்றுமையும் புரையோடிப் போயிருந்தன.

2000.09.26 அன்றைய தினம் அரநாயக்க மலையிலே வானூர்தி விபத்திலே அஷ்ரப் என்னும் தலைவனின் உயிர் உடலை விட்டு பிரியும் வரைக்கும் அப்பெரும் தலைவனின் எண்ணமும் செயலும் இன்னும் சொல்லப் போனால் எல்லாமுமே சமூகமாகத்தான் இருந்தன. பாதிக்கப்பட்ட அல்லது ஒடுக்கப்பட்ட சிறுபான்மை சமூகங்களின் தடுக்க முடியாத பெரும் குரலாக மர்ஹூம் எம்.எச். எம். அஷ்ரப் பாராளுமன்றத்திலும் அதற்கு வெளியிலும் செயற்பட்டார்.

ஆரம்பத்தில் தனது அரசியலை தமிழ் தலைமைகளின் அனுசரணையோடு செய்து வந்த எம் எச் எம் அஷ்ரப் அங்கே தான் சார்ந்த முஸ்லிம் சமூகத்திற்கு நியாயமான அங்கீகாரம் கிடைக்காது என்பதை உணர்ந்தார். அதன் பின்னணியில் தான் முஸ்லிம் சமூகத்திற்கான தனித்துவமான அரசியல் கட்சி ஒன்றை நிறுவ வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு அவர் தள்ளப்பட்டார். பிரபல்யம் மிக்க ஒரு குடும்பத்தில் பிறந்த பிரபல்யமிக்க ஒரு சட்டத்தரணியான அவரின் அரசியல் அபிலாசைகளை செயல்படுத்துவதற்கான களமும் தலமும் முஸ்லிம் சமூகத்திற்கான ஒரு தனியான அரசியல் கட்சியின் மூலமே சாத்தியம் என்பதன் நிமித்தமே ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எனும் முஸ்லிம் சமூகத்தின் பெரும்பான்மையானவர்கள் ஆதரிக்கின்ற இக்கட்சி உதயமாகியது. இக்கட்சி ஆரம்பித்து வெறும் 15 ஆண்டுகளுக்குள் அரசியல் ரீதியான பல முன்னெடுப்புகளை அஷ்ரப் சாதித்து காட்டினார்.

அஷ்ரபின் அரசியல் ஞானம் அலாதியானது. சமயோசிதம் மிக்கது. சமூகம் என்ற அந்த ஒற்றைப் புள்ளியை நோக்கிய அவரது நீண்ட பயணமும் கூர்மையான பார்வையும் முஸ்லிம் சமூகத்திற்கு அரசியல் ரீதியான அந்தஸ்தை வழங்கியது. இதற்கு மிகச் சிறந்த உதாரணமாக பாராளுமன்றத் தேர்தலிலும் மாகாண சபை தேர்தலிலும் 12.5 மூ இருந்த வெட்டுப்புள்ளியை ஒரே இரவிலே ஆர். பிரேமதாச ஜனாதிபதி அவர்களோடு பேசி 5 மூ குறைத்த அந்த சாணக்கியமான நகர்வை சொல்ல முடியும். இன்று அதன் பயனை தேசிய ரீதியில் எல்லா சிறுபான்மை கட்சிகளும் அனுபவித்துக் கொண்டிருக்கின்றன.

கிழக்கின் முகவெற்றிலை என கூறப்படுகின்ற கல்முனை பிரதேசத்தை பிறப்பிடமாகக் கொண்டிருந்த போதிலும் இலங்கை முழுவதும் வாழுகின்ற முஸ்லிம்களின் தலைவராக அஷ்ரப் போற்றப்படுவதற்க்கு காரணம் சமூகம் சார்ந்த அவரது செயற்பாடுகளை முஸ்லிம் சமூகம் அங்கீகரித்தமையாகும். இலங்கை வாழ் முஸ்லிம் சமூகத்திற்க்கு மறுக்கப்பட்ட பல விடயங்கள் பெருந்தலைவர் அஷ்ரபின் தலையீட்டினால் கிடைக்கின்ற வரம் பெற்றன. அரசியல் என்பது சாக்கடை என பொதுவான கருத்தினை மாற்றி அமைத்த மாபெரும் ஆளுமை. இலங்கை முஸ்லிம் அரசியல் வரலாற்றில் பூட்டிக் கிடந்த பல இரும்பு கதவுகளை தனது அரசியல் வியூகத்தின் மூலம் திறந்து காட்டிய திறவுகோல் அஷ்ரப் என்றால் அது மிகையாகாது.



அஷ்ரப் அவர்களின் அபிவிருத்திப் பணிகள் வெறும் கிழக்கு மாகாணத்தை மட்டுமே முகாந்திரமாகக் கொண்டிருக்கவில்லை, அவர் வழங்கிய தொழில் வாய்ப்புகள் கூட அப்படித்தான், அவரது பாராளுமன்ற உரைகளும் அவ்வாறே இருந்தன ஒட்டுமொத்த இலங்கை முஸ்லிம் சமூகத்தினதும் அடையாள குரலாக, ஏகபிரதிநிதியாக, தனித்துவமிக்க தலைமையாக ஏனைய சமூகத்து அரசியல் தலைமைகள் அண்ணாந்து பார்க்கும் நிலையில் அஷ்ரப் செயற்பட்டார்.

மர்ஹூம் எம்.எச்.எம் அஷ்ரப் அவர்களின் மரணம் அவருக்கு ஏதோ ஒரு வகையிலே வெளிப்பட்டிருக்க வேண்டும். அந்த வெளிப்பாட்டை அவர் தனது "போராளிகளே புறப்படுங்கள்" என்ற கவிதை கூடாக நேரடியாகவே பதிந்துள்ளார். மரணத்தின் பின் அவர் உருவாக்கிய ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் என்கின்ற கட்சிக்குள் இடம் பெறக்கூடிய குழப்பங்களை அவர் அந்தக் கவிதை கூடாக சொல்லி வைக்கிறார். அதற்கு முன்னமே அடுத்த தலைமையை அவர் குறித்து காட்டுகிறார் அவரது அந்த இறுதிக் காலங்களில் இறைவனுக்கு மிக நெருக்கமான ஒரு விசுவாசியை போல அவரது எதிர்வு கூறல்கள் இருந்திருக்கின்றன.

செல்வந்த குடும்பத்தில் பிறந்த போதும் மிகச்சிறந்த கல்விமானாக இருந்த போதிலும் அவரது அரசியல் வாழ்க்கை பட்டுப்பாதைகளால் நெய்யப்பட்டதாக இருக்கவில்லை. அஷ்ரபின் காலத்தில் அவர் உருவாக்கிய ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சவால்களை எதிர் நோக்கிய போதெல்லாம் துணிகரமான பல முடிவுகளை எடுத்து அக்கட்சியை காப்பாற்றினார்.

மர்ஹூம் அஷ்ரப் அவர்களின் எதிர்பாராத மரணம் முஸ்லிம் சமூகத்தின் தலையில் பேரிடியாக விழுந்தது. அந்த மரணத்திற்கான காரணம் திட்டமிடப்பட்ட சதியா அல்லது விபத்தா என்ற உண்மை இன்று வரைக்கும் மறைந்தே கிடப்பது மிகப்பெரும் அவலமாகும்.அஷ்ரப் அவர்களின் மரணத்தின் பின் இன்றைய தலைவர் ரவூப் ஹக்கீம் அவர்கள் பலத்த சவால்களுக்கு மத்தியில் தேர்வு செய்யப்படுகின்றார். அஷ்ரபினால் புடம் போடப்பட்ட வளர்க்கப்பட்ட இவரை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் என்கின்ற அஸ்ரபின் பாசறை ஏற்றுக் கொள்கிறது. அஷ்ரபின் காலத்தை விடவும் ஹக்கீமின் காலம் பலத்த சவால் மிக்கதாக இருந்து வந்துள்ளது. தலைமைத்துவ போட்டி, காட்டிக் கொடுப்பு,

கட்சி தாவுதல் இப்படி உள் வீட்டுக்குள் புகைந்து பெரும்வெடிப்பெடுக்கிறது இந்தக் கட்சி.

வருகின்ற எல்லா சவால்களையும் சாதகமாய் மாற்றி கட்சியின் வளர்ச்சிக்கு உரமாய் ஆக்குகின்ற சாணக்கியம் இன்றைய தலைமையிடம் இருப்பதை அவரது அரசியல் ரீதியான அணுகு முறையின் மூலம் அவதானிக்க முடிகிறது. எந்த முடிவையும் நின்று நிதானித்து பலத்த சிந்தனையின் பின் எடுக்கின்ற அந்த ஆளுமை இன்றைய தலைமையின் குறிப்பிடப்பட வேண்டிய சிறந்த பண்பாகும்.

எது எப்படியோ எம்.எச்.எம் அஷ்ரப் அவர்கள் உருவாக்கிய தனித்துவக் கட்சியான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் முஸ்லிம் சமூகத்தின் எல்லா விடயங்களிலும் இன்று மட்டும் ஏதோ ஒரு வகையில் பங்களிப்பு செய்து கொண்டிருக்கின்றது என்பதை கடந்த காலங்களில் பல நிகழ்வுகளில் நாம் கண்டுள்ளோம். அந்த வகையில் இதனை உருவாக்கிய மர்ஹூம் எம்.எச்.எம் அஷ்ரப் அவர்களை எல்லாம் வல்ல இறைவன் பொருந்திக்கொள்ள வேண்டும் என்று நமது ஆழ்மனது பிரார்த்தனையை எல்லாம் வல்ல இறைவனிடம் ஒப்புவிப்போம்.




அரபாத் பஹுர்தீன்

# வங்கப் புலிகளை வேட்டையாடி தொடரை வெற்றியுடன் ஆரம்பித்த இலங்கை

17ஆவது ஆசியக் கிண்ண ரி20 போட்டித் தொடரில் நேற்று (13) இடம்பெற்ற பங்களாதேஷ் அணிக்கு எதிராக குழு பி இன் லீக் ஆட்டத்தில் சகலதுறையில் பிரிகாசித்த இலங்கை அணி 6 விக்கெட்டுக் களால் இலகு வெற்றியைப் பதிவு செய்தது.

ஐக்கிய அரபு இராச்சியத்தில் ஆரம்பித்து இடம்பெற்று வரும் 17 ஆவது ஆசியக் கிண்ண ரி20 தொடரின் இம்முறை 8 அணிகள் பங்கேற்றுள்ளன. அவ் 8 அணிகளும் இரு குழுக்களாகப் பிரிக்கப்பட்டு ஒரு குழுவில் 4 அணிகள் வீதம் முதல் சுற்று லீக் ஆட்டங்கள் இடம்பெறுகின்றன.

அதற்கமைய நேற்று (13) குழு பி இற்கான லீக் ஆட்டத்தில் இலங்கை அணி தனது முதல் போட்டியில் பங்களாதேஷ் அணியை எதிர்கொண்டது. இப் போட்டியின் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணி முதலில் பங்களாதேஷ் அணியை துடுப்பெடுத்தாட பணித்தது.

இதற்கமைய முதலில் துடுப்பாடிய பங்களாதேஷ் அணிக்கு இலங்கை அணியின் வேகப்பந்து வீச்சாளர்களான நுவான் துஷார மற்றும் சமீர ஆகியோர் ஓட்டங்கள் இன்றி விக்கெட்டுக்களை சாய்த்து ஆரம்பத்திலே நெருக்கடி கொடுத்தனர். பின்னர் வனிந்து ஹசரங்க சுழலில் மிரட்டி பங்களாதேஷ் அணியின் ஓட்டக்குவிப்பை கட்டுப்படுத்த நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 5 விக்கெட்டுகளை இழந்து 139 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது பங்களாதேஷ் அணி. துடுப்பாட்டத்தில் 6ஆவது விக்கெட் இணைப்பாட்டத்தில் இணைந்த ஷமீம் ஹொசைன் மற்றும் ஜாக்கீர் அலி ஆகியோர் ஆட்டமிழக்காமல் முறையே 42 மற்றும் 41 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தனர். பந்து வீச்சில் வனிந்து ஹசரங்க 2 விக்கெட்டுகளையும், சமீர மற்றும் துஷார ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

பின்னர் பங்களாதேஷ் அணியால் நிர்ணயிக்கப்பட்ட 140 என எட்டக்கூடிய வெற்றி இலக்கினை நோக்கி பதிலுக்கு துடுப்பாடிய இலங்கை அணிக்கு ஆரம்ப வீரரான குசல் மென்டிஸ் ஒற்றை இலக்க ஓட்டத்ததுடன் ஆட்டமிழந்து ஏமாற்றம் கொடுத்தார். இருப்பினும் களத்திலிருந்த பெத்தும் நிசங்கவுடன் 2ஆவது விக்கெட்டில் இணைந்த கமில் மிஸார அதிரடி காட்டி அசத்தினார். வழமை போன்று இலங்கை அணிக்கு ஓட்டங்களை சேர்த்த பெத்தும் அரைச் சதம் விளாசி 50 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். பின்னர் வந்து குசல் பெரேரா மற்றும் தசுன் ஷானக ஆகியோர் வந்த வேகத்தில் பெவிலியன் திரும்பினர்.

அடுத்து வந்த அணித்தலைவரான சரித் அசலங்க அதிரடி காட்டி 10 ஓட்டங்களுடனும் , கமில் மிஸார 46 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் களத்திலிருக்க இலங்கை அணி 14.4 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து 140 ஓட்டங்களைப் பெற்று 6 விக்கெட்டுக்களால் இலகு வெற்றியைப் பதிவு செய்தது. பந்துவீச்சில் மெஹ்தி ஹசன் 2 விக்கெட்டுகளை வீழ்த்தினார். இப் போட்டியின் நாயகனாக அதிரடியில் மிரட்டிய இளம் வீரரான கமில் மிஸார தெரிவானார்.

# டி20 உலகக்கிண்ண தொடர் எதிர்வரும் பெப்ரவரி 7ஆம் திகதி ஆரம்பம்




2026 ஆம் ஆண்டு இடம்பெறவுள்ள டி20 உலகக் கிண்ண கிரிக்கெட் தொடர் எதிர்வரும் பெப்ரவரி 07ஆம் திகதி முதல் மார்ச் 08 ஆம் திகதி வரை நடைபெறும் என தகவல் வெளியாகியுள்ளது.

அத்துடன் இந்தியா மற்றும் இலங்கை ஆகிய அணிகள் இணைந்து குறித்த தொடரை நடத்தும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

ஒரு மாதம் நீடிக்கும் இந்த தொடரானது இந்தியாவிலுள்ள 05 மைதானங்களிலும், இலங்கையிலுள்ள 02 மைதானங்களிலும் நடைபெறும் என எதிர்பார்க்கப் படுகின்றது.

அத்துடன் தொடரின் இறுதிப் போட்டி அஹமதாபாத்திலுள்ள நரேந்திர மோடி மைதானத்தில் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் பாகிஸ்தான் அணிகளுக்கான போட்டிகள் இலங்கைக்கு மாற்றப்பட வாய்ப்புள்ளதாகவும் கிரிக்கெட் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

# இலங்கை 17 வயதிற்குட்பட்ட உதைப்பந்தாட்ட அணியில் -ரிஷாட் இஷாக்-

(பேருவலை பீ.எம்.முக்தார்)



இலங்கை கால்பந்தாட்டச் சம்மேளனம் இலங்கை 17 வயதுக்கு உப்பட்டோருக்கான தேசிய கால்பந்து அணி வீரர்களுக்கான தேர்வு அண்மையில் நடாத்தியது. இதில்1600 வீரர்கள் கலந்துகொண்டிருந்தனர். இதன் முடிவில் 32 வீரர்கள் மொத்தமாக தெரிவு செய்யப்பட்டிருந்தனர். தெரிவு செய்யப்பட்ட 32 பேரில் 22 பேரை இறுதியாகத் தேர்வு செய்ய 2 மாத தங்குமிட பயிற்சி வழங்கப்பட்டு இலங்கை 17 வயதுக்கு உற்பட்டோர் அணியை தேசிய கால்பந்து அணி தெரிவு செய்தது.

இறுதித் தேர்வு முடிவடைந்த நிலையில் அந்த 22 வீரர்களுக்குள் பேருவளை சீனன் கோட்டை அல் ஹுமைஸரா தேசிய பாடசாலை மாணவனான ரிஷாட் இஷாக் தெரிவானார். இவர் அம்பேப்பிட்டியவைச் சேர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கை தேசிய கால்பந்தாட்ட அணியின் 17 வயதுக்கு உட்பட்டோர் அணியில் தேர்வு செய்யப்பட்டு பேருவளை சீனன் கோட்டை அல் /ஹுமைஸரா தேசிய பாடசாலைக்கும், பேருவளை மண்ணிக்கு பெருமை சேர்ததுள்ளார்.

இதன் அட்ப்படையில் இலங்கையில் நடைபெறவுள்ள தெற்காசிய நாடுகளுக்கான 17 வயதுக்கு உட்பட்டோருக்கான உதைப்பந்தாட்டச் சுற்றுப் போடியின் முதல் போட்டி நாளை மறுதினம் 15 ஆம் திகதி கொழும்பு ரேஸ்கோர்ஸ் சர்வதேச உதைப்பந்தாட்ட மைதானத்தில் இரவு 7.00 மணிக்கு நேபாளம் கால்பந்தாட்ட அணிக்கு எதிராக இலங்கை கால்பந்தாட்ட அணி விளையாட உள்ளது.

இப்போட்டியில் ரிஷாட் இஷாக் விளையாடவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

இவர் எதிர்காலத்தில் இன்னும் பல சாதனைகளோடு வெற்றிகளைக் கொண்டுவர வாழ்த்துவோம்.

# குறிஞ்சிப்பிட்டி முஸ்லீம் மகா வித்தியாலயத்தின் பழைய மாணவர் கிரிக்கெட் தொடர் மகுடம் சூடியது 2006 ஆம் ஆண்டு அணி




கற்பிட்டி குறிஞ்சிப்பிட்டி முஸ்லீம் மகா வித்தியாலயத்தின் பழைய மாணவர்களுக்கு இடையிலான மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் 2006 ஆம் ஆண்டு அணியினர் சம்பியன் பட்டத்தை தனதாக்கி அசத்தினர்.

கற்பிட்டி கல்விக் கோட்டத்திற்கு உற்பட்ட சுமார் 67 வருட வரலாற்றைக் கொண்ட குறிஞ்சிப்பிட்டி முஸ்லீம் மகா வித்தியாலயத்தின் முதலாவது பழைய மாணவர்களுக்கு இடையிலான அணிக்கு 9 பேர் கொண்ட மென்பந்து கிரிக்கெட் தொடர் கடந்த 5,6 மற்றும் 7 ஆம் திகதிகளில் பாடசாலை அதிபர் நௌபாத் தலைமையில் பழைய மாணவர்கள் சங்கம் மற்றும் பெற்றோர் அபிவிருத்திச் சங்கம் ஆகியவற்றின் அனுசரணையுடன் மிகக் கோலாகலமாக இடம்பெற்றது.

இதில் சுமார் 16 பழைய மாணவர்களின் அணிகள் பங்கேற்றிருந்தன.

இலங்கையின் பல பிரதேசங்களில் இப்போது வசித்துவரும் இப் பாடசாலையின் பழைய மாணவர்கள் இப் போட்டிக்காக பாடசாலைக்கு வந்து இப் போட்டித் தொடர்களில் பங்கேற்றமை விசேட அம்சமாகும்.

மேலும் இத் தொடரில் பங்கேற்ற 16 அணிகளும் முதல் சுற்று லீக் ஆட்டத்தில் நான்கு அணிகள் வீதம் 4 குழுக்களாகப் பிரிக்கப்பட்டு பலப்பரீட்சை நடாத்தின. பின்னர் குழு நிலையில் முதல் இடங்களைப் பிடித்த அணிகள் தீர்மானமிக்க அரையிறுதியில் மோதின.

அதற்கமைய முதல் அரையிறுதியில் 2001 ஆம் ஆண்டு அணியை வீழ்த்தி முதல் அணியாக இறுதிப் போட்டிக்குள் நுழைந்தது 2006 ஆம் ஆண்டு அணி. பின்னர் இடம்பெற்ற போட்டியில் 2010 ஆம் ஆண்டு அணியை வீழ்த்திய 2014 ஆம் ஆண்டு அணி இறுதிப் போட்டிக்கான தமது வரவை உறுதிப்படுத்தியது.

இதற்கமைய கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை 5.30 மணிக்கு ஆரம்பித்த தீர்மானமிக்க இறுதிப் போட்டியில் 2006 மற்றும் 2014 ஆகிய அணிகள் பலப்பரீட்சை நடாத்தின.

இப்போட்டியில் ரிப்கானின் அதிரடித் துடுப்பாட்டத்தின் மூலம் வெற்றி பெற்ற 2006 ஆம் ஆண்டு அணி முதல் பருவகால குறிஞ்சிப்பிட்டி முஸ்லீம் மகா வித்தியாலய பழைய மாணவர் வெற்றி மகுடத்தை வெற்றி கொண்டு அசத்தியது.

மேலும் இந்த பழைய மாணவர்கள் கிரிக்கெட் தொடரின் மூலம் இப் பாடசாலையின் பழைய மாணவர்கள் இப் பாடசாலையின் குறைகளை நிவர்த்தி செய்து கொடுப்பதற்கான நிதி உதவியினை வழங்கியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

இப் பத்திரிகையானது (மின்னிதழ்) Moon Media (PVT) Ltd. நிறுவனத்தினால் 41/2, விஜித வீதி, நதிமால, தெஹிவளை எனும் முகவரியிலிருந்து வெளிவருகின்றது.